உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௬] விசுவாவசு௵ ஆவணி௴ [பகுதி-௧௦

சென்னி அநபாயன் குலோத்துங்கன்.

[செந்தமிழ்த்தொகுதி ௬, பக்கம் ௬௦௨-தொடர்பு.]

இனி இராமாநுஜர் காலத்தேயிருந்த சோழனொருவன் வைணவவெறுப்பும் சைவப்பற்றுமுடையனாயிருந்தனனென்பதும், அவன் தில்லைக்குப்போய் ஆண்டுள்ள திருச்சித்திரகூடத்துச் செங்கண்மால் தன்னை அலைகடலில் எறிந்தனன் என்பதும், இவனே கிருமிகண்டனென வைணவரால் வழங்கப்பட்டானென்பதும், பிறவும் "ராமாநுஜார்ய திவ்யசரிதை" என்ற நூலிலும் 'குருபரம்பரை' நூலிலும் விரிவாகக்காணலாம். ஒட்டக்கூத்தர் குலோத்துங்கசோழதேவருலா, இராசராசசோழதேவருலா, தக்கயாகப் பரணி என்னும் மூன்று பெரிய நூல்களில், அகளங்கன் என வேறுபெயர் பூண்ட விக்கிரம சோழன் மகனான குலோத்துங்கனுச்கே ஏற்றியுரைக்கின்ற தில்லைச் சித்திரகூடக்குலைவு இராமாநுஜர் சரிதையிலும் பயிலுதலின் இதனுண்மையைப்பற்றி ஈண்டு ஆராய்வது இன்றியமையாததாம். 'ராமாநுஜார்ய திவ்யசரிதை' என்னு நூலில் (பக்கம்-உ௬௯) தில்லையிற்றிருமாலை அலைகடல்புகவிட்ட சோழன் இவனெனவும், அக்காலம் இஃதாமெனவும் கூறுவதாகத் துணியப்படுகின்ற வெண்பாவொன்று முன்னிரண்டடிகள் சீர்குலைந்து காணப்படுகின்றது: அவ்வெண்பா:—

"அம்பொற் குடைச்சக னாயிரத்...........
தொன்பதாம்..................வருடத்துத்—தென்பால்...
சென்னி குலோத்தங்கன் சித்ரகூடச் செங்கண்மால்
தன்னை யலையெறிநாள் தான்."

என்பது. இச்சீரழிந்த வெண்பாவைக்கொண்டு காலந்துணிதலரி தாயினும் தில்லையில் இது புரிந்தவன் சென்னிகுலோத்துங்கன் என்பானெனப் பெயர்துணிபலாகும். இராமாநுஜர் கலியுகம் பிறந்து ௪௧௧௮ வருஷங்களுக்குப் பின்பு (அஃதாவது கி-பி. 1017) பிறந்து ௧௨௰ யாண்டு வாழ்ந்திருந்தனர் (அஃதாவது கி-பி. 1137 வரை) எனக் கேட்கப்படுகின்றது. இந்நெடிய வாழ்நாளுட்பட்ட சோழமன்னர் மிகப்பலராவர். அப்பலருள் விக்கிரமசோழன் றந்தையும், விக்கிரமசோழன் மகனுமே இச்சென்னிகுலோத்துங்கனென்னும் பெயர்க் குரியராகத் தேறப்படுகின்றார். விக்கிரமசோழன்றந்தையாகிய சோழன், கங்கைகொண்டசோழன் மகள்மகனும் சளுக்குவேந்தனாகிய விண்டுவர்த்தனன் மகனுமாய் உபயகுலோத்தமனெனப் பெயர் சிறந்து, சயங்கொண்டார்பாடிய பரணிபுனைந்த சுங்கந்தவிர்த்த அபயன் என்பான். இவ்வபயனாகிய உபயகுலோத்தமன் அரசாண்டகாலம் கி-பி. 1070-முதல் கி-பி. 1118-வரை யென்ப. இவன்பின் விக்கிரமனாகிய அகளங்கன் காலம் கி-பி. 1118-முதல் 1132-வரை யென்ப. இதற்குமேல் விக்கிரமன் மகனும் ஒட்டக்கூத்தரால் உலாப்பாடப்பட்டவனுமாகிய குலோத்துங்கன்(II) காலமென்ப. கி-பி. 1132-முதற் குலோத்துங்கன்(II) காலமாகவும், இராமாநுஜர் காலம் கி-பி. 1137-வரையாகவும் அறியப்படுதலால், இராமாநுஜர் குலோத்துங்கன் (II) முன்னாட்சியிற் சில்லாண்டிருந்தனரெனக் கருதற்கு இழுக்கில்லையாகும். இராமாநுஜர் காலத்தவராக இங்ஙனம் தெளியப்பட்ட குலோத்துங்கன் என்னும் பெயருடையாரிருவருள் சித்திரகூடச் செங்கண்மாலை அலையெறிந்தவன் யாவன் என ஆராயுமிடத்துக் குருபரம்பரைப்பிரபந்தம் எனப்பெயரிய பழைய தமிழ்ச்செய்யுள் நூலின்கண் இராமாநுஜர் சரிதையிற் பெரும்பான்மையும் ஓதியபின்னே அவருடைய இறுதிவரலாற்றுள் வைத்து,

சீராரு மரங்கத்துச் சிலபகல்கண் மன்னவங்நாட்
பாராளு மன்னனவன் பாகவத ரிடத்திலென்று
மாராத காதலனு மகளங்க நாடாள்வா
னோரும் வைகுந்த நாடாள வேகினன். (௭௧௪)

மாசுறுகிருமிகண்டன்மற்றவன்மேளலிதாங்கி
யாசுறுமுலகமெல்லாமாண்டனன் ...
* * * (௭௧௫)

என்னும் பாடல்களும், இவற்றுட் பின்னதிற்கண்ட பெயருடைய அரசன் தில்லைச்சித்திரகூடத்தைச் சிதைத்த வரலாற்றைக் காட்டும் பாடல்களும் காணப்படுகின்றன. இவற்றால், தில்லைச் சித்திரகூடத்தை யிடித்துக்கடலிலெறிந்தவன் பாகவதர்பால் ஆராதகாதலுடையனாயிருந்த அகளங்கநாடாள்வான் பின்னே மகுடம் புனைந்தவன் என்பது நன்குவிளங்கும். 'ராமாநுஜார்ய திவ்யசரிதை' யால், அகளங்க நாடாள்வார் என்பார் இராமாநுஜருக்குப் பிரதிபக்ஷ நிரசநம் பண்ணிப்போதுபவர் என்று தெரிகின்றது. ஈண்டுக் குறித்த பிரதிபக்ஷநிரஸநத் தொழில், அகளங்கநாடாள்வார் மன்னரேயென்பதைக் குறிப்பானுணர்த்தும். இனி இம்மன்னர் பெருமான் யாரென ஆராயப்புகுமிடத்து, அகளங்கநாமம் சோழர் பலருள்ளும் உபயகுலோத்தமனாகிய சுங்கந்தவிர்த்த அபயனுக்கு மகனான விக்கிரம சோழனுக்கே சிறந்த பெயராமென்பது முன்னரேதுணியப்பட்டதாம் (செந்தமிழ்த் தொகுதி ௩, பக்கம் உ௬௯). ஒட்டக்கூத்தர் விக்கிரமசோழன்மகனான குலோத்துங்கனை(II) "இன்னற்பகைவனிவன்காணகளங்க, மன்னர்க்கு மன்னன் மகன்" (குலோத்துங்க சோழதேவருலா) எனக் கூறுதலாலும் இதனுண்மையுணர்க. அகளங்கநாடாள்வார் விக்கிரமசோழதேவரெனக் கொள்ளப்படுமாயின், அவருக்குப்பின்னே பட்டமெய்தியவனாகக் குருபரம்பரையாற்பெறப்படும் கிருமிகண்டன் என்பான் குலோத்துங்கன் (II) எனக்கோடல் எளிதேயாகும். கூத்தர் நூல்களிலும் வைணவர் நூல்களிலும் ஒருபடியாக அகளங்கன் பின்போந்த சோழனே தில்லைச் சித்திரகூடஞ் சிதைத்தவன் எனப்படுதலோடு அவன் சென்னி குலோத்துங்கன் என்னும் பெயரினன் எனவும் கூறியதற்குப் பொருந்தநோக்குமிடத்து, விக்கிரமசோழன் மகனான குலோத்துங்கனே (II) வைணவராற் கிருமிகண்டன் எனப்பட்டானென்று தெளியலாம். இராமாநுசர்காலத்தே அகளங்கநாடாள்வானான விக்கிரமன் இறந்தபின்னே மகுடம்புனைந்தவனென மேலே விளக்கப்பட்ட இக்குலோத்துங்கன்(II) இறந்ததுகேட்ட பின்னேதான், இராமாநுசர் திருநாராயணபுரத்தினின்று புறப்பட்டுத் திருவரங்கமெய்தியிருந்தனரெனக் குருபரப்பரைப் பிரபந்தத்தாலும் 'ராமாநுஜார்ய திவ்யசரிதை' யாலும் அறியப்படுதலால், விக்கிரமனுக்குப்பின்

அச்சோழன் அரசாண்ட காலம் சிலவாண்டேயாகுமெனத் தெளிய லாகும். இராமாநுசர் கி-பி. 1137-இல் பரமபதமடைந்தவரெனத் தெரிதலால், அதற்குள்ளேதான் குலோத்துங்க (II) னும் இறந்தா னாகக் கருதப்படும். கூத்தர் விக்கிரமன் முதலாக மூன்றுபட்டத் தரசர் காலத்தும் இருந்து பாடினாரென்பதற்கு இயையநோக்கும் போது, அம்மூவருளொருவன் சில்லாண்டே ஆண்டு கழிந்தனன் என்பதும் பொருந்தியதாதல் உய்த்துணர்ந்துகொள்க. இவன் ஆண்டகாலம் சில்லாண்டாதல்பற்றி இவன்மிக இளையனாயகாலத்தே பட்டமெய்தினானென்று கருதற்கு இடனில்லை; என்னையென்றால், கூத்தர் இவனுடைய உலாவின்கண்ணே,

... ...மாதரில்
ஒக்க வபிடேகஞ் செய்யு முரிமைக்கட்
டக்க நிலைமைத் தனித்தேவி—தொக்க
புவன முழுதுடைய பொற்றொடியுந் தானு
மவனி சுரர்சுருதி யார்ப்ப.........

என்பதனால் குலோத்துங்கன் (II) தேவியை அவனோடொக்கப் பட்டாபிஷேகஞ்செய்யுமுரிமையுடையாள் எனக்கூறியதுபற்றிக் குலோத்துங்கன் (II) பட்டமெய்தற்குமுன்னே நல்லவயதுடையனாய்க் கல்யாணம்பண்ணியிருந்தானெனத் தெரிதலால் என்க. இத்துணையுங் கூறியவாற்றால், மேலே சென்னி, அநபாயன், குலோத்துங்கன்எனப் பலபெயராற் சிறந்தவனே வைணவராற் கிருமிகண்டன் எனப்பட்டானென்பதும், அவனே வைணவராலும் கூத்தராலும் ஒருபடியாகத் தில்லைச்சித்திரகூடத்தை அலைகடலிற் புகவிட்டவனாகக் கூறப்பட்டானென்பதும், அவனே தில்லையிற் சிற்றம்பலம், பேரம்பலம் எல்லாம் பொன்மயமாக்கி அக்கோயில்மண்டபம், மாளிகை, பீடிகை, மாடம், கூடம், கோபுரம், சூளிகை, தோரணவாயில், குளம், வீதி என முழுதையும் அணிவிளக்கிப் பணியியற்றினானென்பதும் அறியலாகும்.

மேற்காட்டிய 'அம்பொற் குடைச்சகன்' என்னும் வெண்பாவின்கண் தில்லைச்சித்திரகூடத்தை அலையெறிந்தகாலம் சகாத்தம்-க00கூ என்றே குறிக்கப்பட்டதாமெனக் கொள்ளின், அது கி. பி. 1087 ஆதலின், அஃது, அபயனாகிய உபயகுலோத்துங்கனாலியற்றப்பட்ட

தாகக் கருதப்படும். உபயகுலோத்துங்கன் சளுக்குவேந்தனாகிய விண்டுவர்த்தனன் மகனேயன்றி அகளங்கன் மகனன்மையாலும் அவன் இயற்றிய காலமாகக் கருதப்பட்ட கி. பி. 1087, இராமாநுசர் இறுதிக்காலமன்மையாலும் குருபரம்பரைப் பிரபந்தமுடையார் ஒட்டக்கூத்தர் இவர்கள் கூற்றோடு முரணுதலாலும் அவ்வாறு கருதல் பொருந்தாதெனவறிக. தில்லைச்சித்திரகூடஞ் சிறுகலைந்த காலத்து இராமாநுஜர் கொங்குதேசராசாக்கள் சரிதையிற்கண்ட விட்டலதேவராசனிடம் சென்று அவனைத் தமக்குச் சீடனாக்கினாரென அவருடைய சரிதைகளால் அறியப்படுகின்றது. விட்டலதேவராயன் கி. பி. 1098 ஆம் ஆண்டிற்பட்டமெய்தி கி. பி. 1149 வரையிருந்தனனென்ப. சகாத்தம் ௧௦௦௯-ஆகிய கி. பி. 1087, விட்டலதேவராயன் அரசாட்சிக்காலமல்லாமையையும் ஈண்டைக்கு நோக்கிக் கொள்க. இவற்றாற் றில்லைச்சித்திரகூடச் செங்கண்மாலை அலைகடலிலே எறிந்த சென்னி குலோத்துங்கன், அபயனாகிய முதலாங் குலோத்துங்கனல்லாமை தேறுக.

இனித் தண்டியலங்கார நூலார் தம்மினிய நூலின் கண்ணே பலவிடத்தும்,

"வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து
மண்குளிரச் சாயை வளர்க்குமாந்—தண்கவிகைக்
கொங்கா ரலங்க லநபாயன் கொய்பொழில்சூழ்
கங்கா புரமாளி கை."

"மூவாத் தமிழ்பயந்த முந்நூன் முனிவாழி
யாவாழி வாழி யருமறையோர்—காவிரிநாட்
டண்ண லநபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை."

"குழைபொருது நீண்டு குமிழ்மேன் மறியா
வுழைபொருதென் னுள்ளங் கவரா—மழைபோற்
றருநெடுங்கைச் சென்னி தமிழ்நா டனையார்
கருநெடுங்கண் போலுங் கயல்."

"செம்மை மரைமலருந் திங்களு நும்முகமுந்
தம்மிற் பகைவிளைக்குந் தன்மையவே—யெம்முடைய
வைப்பாகுஞ் சென்னி வளம்புகார் போலினியீ
ரொப்பாகு மென்பா ருளர்."

என்பனபோலப் பெரும்பான்மையாக அநபாயன், சென்னி என்னும் பெயர்களாலொருசோழனையே எடுத்துப் புகழ்ந்துரைத்துள்ளார். அந்நூலுட் புகழப்பட்ட சென்னி, அநபாயன் என்னும் சோழன் யாவனென ஆராயுங்கால், அவ்வலங்காரநூற்கண்ணே,

"சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்று—லொன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு

இதனுள் ஒன்று கண்ணாகவும், மற்றொன்று கவியாகவும் நின்றவாறு கண்டுகொள்க. மலரி என்பது ஓர் ஊர்" (என்பதுரை.)

என ஒட்டக்கூத்தர் கவியைப் புகழ்ந்துரைக்குமாற்றால், அவ்வணிநூல் கூத்தர்காலத்தே இயற்றப்பட்டதாகத் துணியப்படும். கூத்தர்காலத்தே சென்னி அநபாயன் என்னும்பெயர்களால் விளங்கியவன் அகளங்கன் மகனாகிய குலோத்துங்கன் (II) என்பது முன்னே தெளிவிக்கப்பட்டதாம். இவற்றாற் றண்டியலங்கார நூலாற் புகழப்பட்ட சோழனும் இவனாதல் காண்க. இனித் தண்டி யலங்கார நூற்கண்ணே,

"காடத்தான் மாரியுங் கண்ணால் வெயிலு
நிலாவயிரக் கோட்டா னிலவுஞ் - சொரியுமா
னீளார்த் தொடையதுல னேரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்."

என்பனபோலவும் சிலவிடத்து வருதலால், அவ்வணிநூல், கலிங்கம் வென்ற அபயன் காலத்ததாகக் கூறலாகாதோவெனில், கலிங்கம் வென்ற அபயன் சயங்கொண்டார் பாடிய பரணி புனைந்தவன்; அவன் காலம் ஒட்டக்கூத்தருக்கு முற்பட்டதாதலாலும் அவ்வபயனுக்கு அநபாயன் என்னுமோர் பெயருண்டாயின் அதனை அவனுக்குச்சூட்டிய கலிங்கத்துப்பரணிநூற்கண் சயங்கொண்டார்என்னும் புலவர் பெருமான் கூறுதிராராதலாலும் ஆகாதென்க. மற்றிக்கலிங்கம் வென்றதனை ஈண்டெடுத்தோதியதெல்லாம் பிதாமகன் சிறப்பைப் பேரனுக்கேற்றிப் புகழ்ந்ததாமென்க.

இனித் திருத்தொண்டர் புராணநூற்கண்ணே சேக்கிழார் நாயனார் தங்காலத்துச் சோழனொருவனை:

சென்னி யபயன் குலோத்துங்க சோழன் றில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர் போரே றென்றும் புவிகாக்கு
மன்னர் பெருமா னநபாயன் வருந்தொன் மரபின் முடிசூட்டுந்
தன்மை நிலவு பதியைந்தி னொன்றாய் நீடுந் தகைத்தவ்வூர்.

(சண்டேசுரநாயனார்புராணம்-அ)

அந்நகரிற் பாரளிக்கு மடலரச ராகின்றார்
மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி யணிவிளக்குஞ்
சென்னிநீ டநபாயன் றிருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனார் புகழ்ச்சோழ ரெனப்பொலிவார்.

(புகழ்ச்சோழநாயனார் புராணம்-அ)

என்பனபோலப் பலவிடங்களிலும் அநபாயன், அநபாயன் என எடுத்துப் புகழ்ந்துள்ளார். சேக்கிழார்நாயனாரால், திருத்தொண்டர் புராணத்துள் அநபாயன் என்னும்பெயரை வைத்தோதிய செய்யுள்கள் பலவற்றுள் ஈண்டுக்காட்டிய இவ்விருசெய்யுளுமே அவ்வநபாயன் * தில்லைத்திருவெல்லையைப் பொன்மயமாக்கிய செய்தியையும் தில்லைநகர் மணிவீதியை அணிவிளக்கிய செய்தியையும் கூறுவனவாய்ச் சிறிது சரித்திரம்பற்றி வந்தனவாம். இவ்வநபாயன் என்னும் பெயரும் இவன் செய்த தில்லைத்திருப்பணியுங் கொண்டேதான் இவன் இன்னானென்று காணவேண்டியுள்ளது. சேக்கிழார்நாயனார் காலத்துச்சோழன் கலிங்கம்வென்ற அபயனாயின் மற்றென்னை காரணத்தானே அவர் அவனை உபயகுலோத்தமன் எனவும் கலிங்கம்வென்றவன் எனவுஞ் சுங்கந் தவிர்த்தவனெனவும் புகழ்ந்தனரில்லையென வினாநிகழ்த்தற்கு இடனாகின்றது. அன்றியும் இவராற் குறிக்கப்படுகின்ற தில்லைத் திருவெல்லையைப் பொன்மயமாக்குதலும் தில்லைத் திருவீதியணிவிளக்குதலும் அநபாயன் என்னும் பெயரும் அக்கலிங்கம் வென்ற அபயனையே புகழ்தற்கெழுந்த பரணிநூலிற் சயங்கொண்டார் கூறுமலொழிந்ததற்குக் காரணமும் அறியப்படல்வேண்டும். இவற்றாற் சேக்கிழார்நாயனார் காலத்தவன் கலிங்கம் வென்ற அபயன் என்பது துணியப்படாததாகின்றது. கூத்தர் உலாவிலும், உலாவை யடுத்துரைத்த வெண்பாவிலும், தண்டியலங்காரத்தும் நன்றுபயின்றுள்ள அநபாயன் என்னும் பெயருக்கும், கூத்தர் இரண்டுலா

* 'பேரம்பலந்துய பொன்னணிசோழன்' என்றதும் இதன்கணடங்கும்.

க்களிலும் தக்கயாகப்பரணியிலும் விவரணமாக விரித்துரைத்த தில்லைத் திருப்பணிகளுக்கும் பொருந்த நோக்குமிடத்து இப்புராணத்துட் கண்ட பெயரும் செயலும் அகளங்கன் மகனான சென்னி அநபாயன் என்னும் பெயர்களால் விளங்கிய குலோத்துங்கன் (II) என்பானுக்கே யுரியவாமெனத் தெளியலாகும். இவன் தில்லைச் சிற்றம்பலம் பேரம்பலமுதலிய பலவற்றையும் பொன்னிற் குயிற்றி அத்திருவெல்லையைப் பொன்மயமாக்கியதன் விவரணத்தைச் "செந்தமிழ்"த் தொகுதி ௫, பக்கம் ௩௬௬ இல் கண்டுகொள்க.

(இன்னும் வரும்)

ரா. இராகவையங்கார்.

பத்திராசிரியர்.

திருக்குறள்-வீட்டின்பால்.

Theosophy of the Kural.

(௫உ௮-ம் பக்கத்தொடர்பு.)

மேற்கூறிய மெய்யுணர்வென்னையெனில், நிலமுதலுயிரீறாகிய தத்துவங்களின் உண்மைகளையும், அவைகள் காரணகாரிய சம்பந்தமுடையவென்றும், நிலைபேறுடையவென்றும் தெளிந்து, கரணங்களெல்லாம் கடந்துநின்ற அகாரணமாகிய முதல்வனை இத்தத்துவங்கள் எல்லாவற்றிலும் காண்பதே. உள்ளது, மெய்ப்பொருள், செம்பொருள் என்பன தோற்றக்கேடுகளின்றி நித்தியமாய், நோன்மையாற்றன்னையொன்றும் காத்தலின்மையிற் றாய்தாய், தானெல்லாவற்றையும் கலந்துநின்றும் தான் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாய் நிற்கும் முதற்பொருளாகிய பரம்பொருளையுணர்த்திற்று.

இம்முதற்பொருளையடைதற்குச் சிறப்புவகையான் மூன்றுபாயங்கள் கூறுகின்றார். அவைதாம் கேட்டல், சிந்தித்தல், காண்டல் என்பன. இவை மூன்றும், 36வது அதிகாரம் 6.7. ஆவது குறள்களால் அருளிச் செய்கிறார். இவற்றில், காண்கையாவது, உயிர்தன் அவிச்சைகெட்டுப் பரமசுகத்துடன் ஒற்றுமையுற இடைவிடாது அப்பரம்பொருளைத் தானாகப் பாவித்தல். என்னை? ஒன்றினைத் தானாகப்

பாவிக்க அந்நிலைமை வந்தெய்துவது எப்படியெனில், கூறுதும். உயிர்களுக்கு இரண்டு முக்கிய குணங்களுண்டு. அவைதாம் பற்றின்றி நில்லாததும், அது அதுவாதலும் ஆம். அஃதாவது தானெனத் தனித்து நில்லாது, கட்டையில் அக்கினி போலவும், அல்லது வடத்தில் ஊஞ்சல் போலவும், அல்லது கொம்பிற் பழம் போலவும் பற்றின்றி நில்லாது. அப்படி நிற்பின், யாதொன்றுபற்றின் அதனியல்பாய்நின்று தானென வேறாய் விளங்காது. ஆகவே உடலுடன் கலந்தபோது உடலாகவும் கடவுளுடன் கலந்தபோது கடவுளாகவும் காணப்படாதுநிற்கும் உயிர். அதுபற்றியே, ஒரு சாரார் உடலினைச்சோதித்து உயிரைக் காணாது எங்கியும், இன்னொரு சாரார், கடவுளைச் சோதிப்பதுபோற் சோதித்து உயிரைக் காணாது மயங்கியும் உயிரெனப்படுவ தொன்றில்லை யெனப் பொய்யுரை கூறி யுழன்றார்' இத்தன்மையால், அதைப் பளிங்குக் குவமை கூறியுள்ளார். "பந்தமறும் பளிங்கனைய சித்துநீ'' 'அடுத்ததுகாட்டும்பளிங்கு'என்றார் நம்மாசிரியரும். நம்மவர்களன்றி,கிறிஸ்துமதத்தில் மிகவும் பேர்போன என்றி டிரம்மண்டுபண்டிதரும், "எல்லா மாந்தரும் பளிங்குகளாவர். இத்தன்மையானே, அதுவதுவாதல் சித்தித்ததாகும். மனிதனுக்கு மிகவும் ஒற்றுமையான உவமானம் அவன் பளிங்கென்பது'' என விளக்கினர். மாசுபடிந்த பளிங்கானது பந்தம் அற அறத் தன் ஒளியை மிகுதியும் பிரதிபலிக்கச் செய்து, பந்தம் முற்றும் அறவே, அதன் ஒளி பூரணமாய் விளங்கி, அப்பளிங்கைப் பார்க்கவொண்ணாது அதனை மூடிநிற்கும். பரமாசிரியரும், இஞ்ஞாயிறு, சுகண் (கண்ணும் பளிங்கே) ஆகிய திருட்டாந்த வாயிலாய், "சென்று சென்றணுர்வாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்'' என்று திருவாய்மலர்ந்தருளியதூஉம் இவ்வுண்மையே. டிரம்மெண்டு பண்டிதர் இத்தன்மையை, (Laws of reflection and assimilation) பிரதிபலித்தல், ஒன்றுகுதல் என்னும் விதிகளாகக் கூறியுள்ளார். அஃதாவது "நான் அதைக் கண்டேன், அதை என்னிடம் தோற்றுவித்தேன், அதுவானேன்'' என்பதாகும்.

பின்வரும் சுவேதாசுவதர உபநிடத வாக்கியங்களையும் கவனிக்கவும்.

"அவனை நினைந்து, அவனுடன் கூடி, அவனுடன் ஒன்றாக வும், முடிவில் மலமாயையின்றாம்.

"மாசு படியும் கண்ணாடியானது துலக்கவும் ஒளி பெறுதல் போல, தன்னுடைய உண்மை ஸ்வரூபத்தை யறிந்தவுடன் மனக் கவலை தீர்ந்து இன்பத்தை அடைகின்றான். விளக்கைக்கொண்டு பார்ப்பதுபோலத்தன் ஸ்வரூபத்தைக்கொண்டு பரம்பொருளின் உண்மை யையறிகிறான். என்றும் உள்ளதாகிய, பிறப்பிலியாகிய எல்லாத்தத் துவங்களையும் கடந்துநின்ற கடவுளை யுணர்ந்ததும், எல்லாப் பாசங் களினின்றும் நீக்கமடைகின்றான்."

இவ்வுண்மைகளெல்லாம் சந்தானகுரவரும் பின்வரும் விருத்த ப்பாவிற் றொகுத்துக்காட்டியதுங் காண்க.

கண்டவிவையல்லேனானென்றகன்றுகாணுக்
கழிபாமுநானல்லேனெனக்கருதிக்கசிந்த
தொண்டினொடுமுளத்தவன்றானின்றகலப்பாலே
சோகமெனப்பாவிக்கத்தோன்றுவன்வேறின்றி
விண்டகலுமலங்களெல்லாங்கருடதியானத்தால்
விடமொழியுமதுபோலவிமலதையுமடையும்
பண்டைமறைகளுமதுநானானேனென்று
பாவிக்கச்சொல்லுவதிப்பாவகத்தைக்காணே.

ஆகவே, சித்தாந்த மென்னை யெனின், உலகமானது மூவினைப் படுதலின் ஒருவனால் உண்டாக்கப்பட்டதெனவும், அவனும், முடிவி லாற்றலும், முற்றறிவுமுடையவனாக வேண்டுமெனவும், அவனே அன்பாகவும், தனக்கென ஓரிச்சை யில்லாதவனாகவுமிருத்தலின், அவன் செய்யும்படைத்தல் முதலிய தொழில்களும் உயிர்களை மூடிய அழுக்கைப் போக்கற் கென்றும், இறைவனும், உயிர்களும், உயிர் உடல்போல், ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்றுமிரண்டு மின்றா காமலிருப்பனவென்றும், உயிர்களும் தங்கள் அறியாமையாகிய பாச த்தையகற்றிக்கொள்ள வேண்டுமாயின், நான் எனதென்னும் பற்றுக் கள் அறவும், வேண்டுதல் வேண்டாமை யறவும் வேண்டுமெனவும், தனக்குண்மையான பற்றுக்கோடு ஒப்புயர்வற்ற அருட்பெருஞ் சோதி தனிப்பெருங்கருணை யெனத் தேர்ந்து அவனிடம் அயரா

அன்பினைச்செலுத்தி அவனடிச்சேர்ந்து இறைபணி நிற்கின், அவனை மலம் மாயையாகிய வல்வினைநோய்கள் சார்தரா: அவ்வினையடைத ற்குபாயங்களும், கேட்டல் நினைத்தல் பாவனையாகிய சரியை கிரியை யோகசமாதிகளெனவும் ஆசிரியர் கூறிப்போந்தார்.

மேலதுவே, நமது சிற்றறிவினால் அளந்தபடி வீட்டுவிஷயத் தைக்குறித்து ஆசிரியர் கருத்தாகத்தோன்றுகிறது. இவ்விதமாக விரித்துக்காட்டிய உண்மையில் யாவருக்கும் சம்மதமாயிருக்குமெ ன்பதெமதெண்ணம். ஆயின், ஓர்மதம் எம்மதத்தவருக்கும் சம் மதமாயிருக்குமோ என ஆசங்கை நிகழுங்கால், எல்லா மதங்களின் சாரமாயும் சமரசமாயுமுள்ளது சாலும். நம்மிலும், அவ்வித மதம் உண்டெனவும் துணிவாம். அம்மதம், கண்ணாடியானது பார்ப்ப வர் முகத்தையே காட்டுவிக்குமாறுபோல், எவரும் பார்த்தவுடன் தங்கள் தங்கள் மதமாமெனக் கொள்ளுகின்றார்கள். ஐரோப்பிய பண்டிதர்களிலும், நம் வடமொழியிலுள்ள சிற்சில நூல்களை சாங் கிய நூலாகவும், யோகநூலாகவும், அத்துவிதநூலாகவும் பலவாறு கூறினார்கள். தற்காலத்துப் பண்டித சிரோமணிகளாகிய மக்டன னல், கார்பே என்பவர்கள் கருத்து, அந்நூல்களிற் கூறிய வுண்மை சாங்கியம், யோகம், துவைதம், அத்வைதம் முதலியவையன்றி, இவைகளின் சாரங்களெல்லாம் அடங்கிய சமரச நூல்களாகும் என் பதே. இவ்வித சமரச சித்தாந்தமடங்கிய நூல்களாகவும் கொண் டது சுவேதாசுவதர உபநிடதமும், பகவற்கீதையுமே; தமிழில் நம து திருக்குறளைச் சொல்லலாம். அவ்வித சமரசநூலாகவே கல்லா டர்முதல் வந்த ஆன்றோர்களாற் கொண்டாடப்பட்டுமிருக்கின்றது. எல்லா மதத்தவர்களும் அதனைத்தழுவுவதும் அதுபற்றி. விரிவ ஞ்சி இம்மட்டே விடுத்தாம்.

திருவள்ளுவநாயனாரின் திருவருளால் இச்சங்கமும் நீடித்து வாழக்கடவதாக.

(முற்றும்.)

ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை.

சேந்தனாரும் திருமாளிகைத்தேவரும்.

தமிழ்நாட்டுள்ள புராதன சிவாலயங்களுட்பல, சைவாசாரியருள் முதல்வர்களாகிய திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்திகளாற் பாடப்பெற்று இற்றைக்கும் புகழுடன் விளங்குகின்றன. இந்நாயன்மார்களால் தேவாரம் பாடப்பட்ட ஸ்தலங்கள்தவிர, நாளடைவிலே பற்பலஸ்தலங்கள் கட்டப்பட்டுப் பெருமையடையத் தலைப்பட்டன. அவற்றுள் அநேகம் அக்காலங்களிலாண்ட அரசர்களால் ஸ்தாபிக்கப்பெற்று, அவர்கள் அபிமானத்தாலும் நன்கொடைகளாலும் பிராபல்லியமடைந்தன. அவ்வாறு தம்மால் ஸ்தாபிக்கப்பெற்ற ஸ்தலங்களும் ஒருவாறு (பழங்கோயில்களைப்போல) பாடல்பெற வேண்டுமென்னும் அவாவும் இவ்வரசர்க்கு உண்டாயிருக்கலாம். இவ்வாசை நிறைவேற அப்பொழுதிருந்த ஸத்சைவர்கள் சிலரைக்கொண்டு பாடுவித்திருக்கலாமென்று துணியலாம். இவ்வாறு பாடல்பெற்ற ஸ்தலங்கள் திருவிசைப்பாப்பெற்ற ஸ்தலங்களென்றும், இப்பாடல்களுக்குத் திருவிசைப்பாவென்றும் பெயராயின. இப்பாசுரங்களைப்பாடினோர் ஒன்பதின்மர்: அவர்கள்தாம், திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்திநம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதியராயர் என்பவர்கள். இவர்களுள் கருவூர்த்தேவர் முதலிராசராசனால் இயற்றப்பட்ட தஞ்சைராசராசேச்சுரத்தையும், அவன் மகன் கங்கைகொண்டசோழனென்னுமறுபெயர் பூண்ட இராசேந்திரசோழன் கட்டிய கங்கைகொண்ட சோளீச்சுரத்தையும் மற்றும் சிலதலங்களையும் பாடினார். கண்டராதித்தர் என்பார் இராசராசனுக்குத் தமயன் முறையாகவேண்டும்.[1] சேதியரா

---

(1)

பராந்தன் I.
(மதுரைகொண்டபரகேசரி)
906—907 கி. பி.

- ராஜாதித்தன்
- கண்டராதித்தன்
  - மதுராந்தகன்
    - கண்டராதித்தன் (திருவிசைப்பாக்காரர்)
- அரிஞ்சயன்
  - பராந்தகன் II.
    - ராசராசன் I. (985 கி. பி.)

யர் என்னும் பெயர் திருமுனைநாடாண்ட சிற்றரசர்கள் பொதுப் பெயர். இவர் முன்னோர்கள் தாம் மெய்ப்பொருணாயனாரும், நரசிங்கமுனையரையரும்.

சேந்தனார் என்பவர் பாடிய ஸ்தலங்களில் திருவீழிமிழலையுமொன்று. இவ்விடத்துக் கோயிலில் இரண்டாம் பிராகாரத்து மேலைக் கோபுரத்தின் நிலையில் அடியிற்கண்ட சாஸனம் காணப்படுகிறது. இதன் முற்பாகம் காணப்படவில்லையாயினும், முக்கியமான பாகம் கெடாமலிருக்கிறது:—

1 [வும் நா]ங்கள் நா—
2 ளொ[2]பாதி எரிக்கக்—
3 கடவொ[3]மாக இவ்வூ—
4 ர்கவிணியன் எறஞ்—
5 செங்[4]தன் பக்கல்
6 கொண்டகாசு ௨௰௬
7 இருபத்தாறுங்கொ—
8 ண்டொம்[5]பெ.று—
9 ம் ஸ்ரீ கொ[6]யில் பெ—
10 ற்றுடையார் எரிக்க[க்]—
11 கடவாராக இப்பரிசு
12 இசைந்து கல்லில்
13 வெட்டுவித்தொ[7]—
14 ம் இவவனைவொம்[8]
15 ஜாபஜோத்ர ஶிவ—
16 ஜ்ஞா நிஶிவஶோவரு
17 தாஙகூழ கூபிஷ்ஙிவ —
18 த்ஶ்ஹாஸ்ஷ ஹா—

(2) நாளோபாதி
(3) கடவோ
(4) சேந்தன்
(5) கொண்டோம் மேலும்
(6) கோயில்
(7) வெட்டுவித்தோம்
(8) இவ்வனைவோம்

19 ஹுஸி[ணா]ஷதஜேிரெ |
20 இயஜஜவநூாஹெஸு—
21 ஈஈமெகூஉ

இதனடியில் இதேகாலத்ததும் இதேமாதிரியுமான எழுத்தில் முதல்இராசராசன் சாஸனம் ஒன்று வெட்டப்பட்டிருக்கிறது. இதன் பின்பாகம் காணப்படாமற் போய்விட்டது. இதில் இவ்வரசனுடைய யாண்டு குறிக்கும்பாகம் உடைந்துவிட்டது; ஆகையால் அறிந்துகொள்ள முடியவில்லை. இதுநிற்க,

மகாமண்டபத்துத் தென்வாயிலின் நிலைக்காலில் அடியிற்கண்ட சாஸனம் வரைந்துள்ளது :—

(1) ஸஹிஸ்ரீ (2) ஜயஜோ—
(3) த்ருஸிவஜோ (4) நிஜிவஜாவ—
(5) நுதாஈகுழசு (6) கிஷீ*வத்வநுஹெ—
(7) ஈஸுழஹொஹுஸி (8) ணாஷதஜேிரெ
(9) திருமாளிகை ம (10) ஷவர்வைத்ததி—
(11) ருநுந்தாவிளக் (12) கு

இச்சாசனத்தின் எழுத்து உத்தேசம் கி. பி. 11ம் நூற்றாண்டின் பிற்பாதியைச்சேர்ந்ததாயிருக்கிறது. ஆகையால் முன்னெழுதிய சாஸனத்தின் பிரதி என்று காணப்படுகிறது. இங்குள்ள கோயில் ஒருகாலத்துப் புதுப்பிக்கப்பட்டிருக்கவேண்டுமென்பதும், அதன் கற்கள் பலவும் வெவ்வேறு கட்டிடங்களிற் சேர்த்துக்கட்டப்பட்டிருக்கவேண்டும் என்பதும், இவ்வாறு சிதறுண்ட நிலைக்கற்களிலொன்று முதற்சாஸனமுடைமையால் விளங்குவதோடு, இன்னும் பல காரணங்களுமுண்டு[9]. இவ்வாறு புதுப்பித்தகோயிலில் முன்னிருந்த நிலைக்காலின்

---

* சுபிஷ்வத்

(9) இப்பழங்கோயிலின் தூண்கள்சில அம்மன்கோயில் மகாமண்டபத்திற்குபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன : சில திருவுண்ணாழிகை மண்டபத்தில் (சுற்றுமண்டபம் அல்லது சுற்றாலயம் என்னப்படுவது) வைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன. இத்தூண்களைவைத்துப் பின்சொன்னமண்டபங்கட்டினதாக ஹாஈஆஜி.................என்பவன் ஒருவன் இரண்டு மூன்று இடங்களிற் சொல்லிக்கொள்ளுகிறான். கோயில் ஸ்தூபியும் செங்கல்லால் கருஞ்சாந்தில் கட்டப்பட்டிருக்கிறது. ஆயின், பழங்கோயிலின் வடிவைவிட்டுப் புதியமாதிரியாகக் கட்டவில்லை என்பது திண்ணம்.

சாஸனத்தைத்திரும்பஎழுதிவிடவேண்டுமென்னும்அபிப்பிராயத்தாற் பதிப்பித்திருக்கவேண்டும். பதிப்பிக்கையில் தமிழ்ப்பாகத்தைவிட்டுவிட்டு சம்ஸ்கிருத பாகத்தைமாத்திரம் எழுதி, பின்னால் ஒரு சிறு தமிழ் வாக்கியத்தையும் சேர்த்திருக்கிறது.

முதற் சாஸனத்தின் தமிழ்ப்பாதியால் சேந்தன் என்பார் திருவீழிமிழலையைச் சேர்ந்தவரென்றும், இவர் கௌண்டன்னிய கோத்திரத்தைச் சேர்ந்தவரென்றும், எறன் என்னும் மறுபெயர்பூண்டவரென்றும் தெரியவருகின்றன. பின்னதாகிய சம்ஸ்கிருதபாகம் ஓர் அனுஷ்டுப்ஶ்லோகம்: இதன் பொருள் ;—

“ஹரியால் கொடுக்கப்பட்ட கோயிலிலிருக்கும் பிரபுவாகிய சம்புவுக்கு இவ்விடத்தானாகிய சிவஞானி - ஜயந்தன், சூரிய சந்திருள்ளளவும் (எரியும்பொருட்டு ஒரு) தீபம் வைத்தான்” என்பது. இதனால் ஜயந்தன் என்பார் ஒருசிவஞானி என்பது பெறப்படும். சாஸனமுழுமையும் உற்றுநோக்கின் கௌண்டன்யனாகிய எறன் சேந்தன் என்பவருக்குப்பெயர் வடமொழியில் ஜயந்தன் என்பதும், இவர் ஒரு சிவஞானி என்பதும் புலப்படும். இதனுடன் இரண்டாம் சாஸனத்துப் பின்பாகமாகிய தமிழ்வாக்கியத்தின் விஷயத்தையும் சேர்ப்பின், இவரே திருமாளிகைத்தேவர் என்னும் மறுபெயர் பூண்டிருந்தார் என்பதும் ஏற்படுகிறது. பின் சாஸனத்தின் காலத்துக்கும் முன்னெழுதியதற்கும் உத்தேசம் மூன்று தலைமுறைகள்தான் ஆயிருக்கக் கூடும்.* ஆதலால்இரண்டாம் சாஸனம் எழுதியகாலத்து, சேந்தனாரும் திருமாளிகைத்தேவரும் ஒருவரே என்னும் துணிபு இருந்ததாகத் தோற்றுகிறது. இவ்விருபெயர்களும் முறையேதிருவிசைப்பாக்காரர்களாகிய சேந்தனாரதும் திருமாளிகைத்தேவரதுமாயிருக்கவேண்டுமென்றுகொள்ள, ‘சிவஞானி’ என்னும்பதம் பலமாய் உதவுகிறது. ஆதலால் சேந்தனார் என்பது இச்சிவஞானியின் இயற்பெயராயும், திருமாளிகைத்தேவர் என்பது சிறப்புப்பெயராயுமிருக்கலாமென்று தோற்றுகிறது. (சேந்தன் அல்லதுஜயந்தன் என்னும் பெயர் சிவபிரான்பெயர்களுளொன்று.)

---

*ராசராசன் காலத்துக்கும் கி. பி. 11-ம் நூற்றாண்டின் பிற் பாகத்துக்கும் 80-90 வருஷங்கள் இடையிடுபடுவதால் இவ்வாறு கொள்ளப்பட்டது.

திருவிசைப்பாக்காரர்களைப்பற்றிச்சரித்திரங்கள் கிடையா. திருவாவடுதுறையில் ஓர் ஸ்தலபுராணமிருப்பதாயும், அதில் இவர்களிற் சேந்தனாரையும், கருவூர்த்தேவர் திருமாளிகைத்தேவர்களையும் பற்றிச் சொல்லியிருப்பதாயும் பிரஸ்தாபம். திருவிசைப்பாவுடையாராகிய சேந்தனார் பட்டணத்தடிகளார் காலத்தவரென்று சொல்வதுண்டு. அதற்கேற்ப, இவர் பாடலொன்று ஒரு சேந்தனாரைக்குறிக்கின்றது[10]. தொன்றுதொட்டு வந்த சரித்திரமில்லாதவரை இச்சாஸனங்களின் பலத்தால் சேந்தனாரும் திருமாளிகைத்தேவரும் ஒருவரே யாவர் என்று கொள்ளல் பொருத்தமாகின்றது.

து. அ. கோபிநாதராவ்.

---

(10) மத்தனைத் தயிருண்பானும் மலர்மிசை யேகினானும்
நித்தலுந் தேடிக்காணா நிமலனே நீயின்றெய்தி
செய்த்தனைத் திருநாங்கூரிற் சேந்தனை வேந்தனிட்ட
கைத்தளை நீக்கிக்கண்முன் காட்டுவெண்காட்டுளானே.

ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம்.

ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்னும் மொழிகளின் இலக்கணம் இன்னதென்று நன்குவிளங்கவில்லை. ஒன்பது பத்து-தொண்ணூறு, ஒன்பதுநூறு-தொள்ளாயிரம் என்று திரிவதில், ஒன்பது என்னும் பதம் தொல் என்னும் முதலையுடைத்தாதலும், பத்து நூறு என்னும் பதங்கள் முறையே நூறு ஆயிரம் என்றாதலும் இன்ன காரணத்தால் என்று ஏற்படவில்லை. இவ்விஷயங்களைக்குறித்து வெவ்வேறு காலங்களிலுண்டான இலக்கணங்களாலறியலாமேயென்று ஆவலுடன் பண்டைத் தொல்காப்பியத்தைத் திருப்பிப் பார்க்க.

"ஒன்பா னொகரமிசைத் தகர மொற்று
முந்தை யொற்றே ணகார மிரட்டும்
பத்தென் கிளவி யாய்த பகரங்கெட
நிற்றல் வேண்டு மூகாரக் கிளவி
யொற்றிய தகரம் றகார மாகும்"

(குற்றியலுகரப்புணரியல்-சூ. 39)

என்னும் சூத்திரமும், அதனுக்கு "நிலைமொழியாகிய வொன்பதென்னுஞ் சொல்லி னொகரத்திற்கு மேலாக, தகரம் ஒற்றாய்மிக்குவரும்; முன்சொன்ன வொகரத்தின் முன்னர், னகரவொற்று இரண்டு ணகரவொற்றாய் மிக்குவரும். வருமொழியாகிய பத்தென்னுஞ் சொற்றன்கட்பகரமும் ஆய்தமுங்கெட, நிலைமொழியிலிரட்டிய ணகரத்தின் பின்னர், ஊகாரமாகிய வெழுத்தினை நிற்றல்வேண்டும். வருமொழியாகிய பத்தென்பதி னீற்றதன்மேலேறிய உகரம் கெடாது பிரிந்து நிற்ப, ஒற்றாய் நின்ற தகரம் றகாரவொற்றாகும். எ-று.

இஃது ஒன்பதும் பத்துமெனநின்றான் முடியற்பாலவென்பது. பகர ஆய்தம் என்றாத முறையன்றிய கூற்றினான், நிலைமொழிக்கட் பகரக்கேடுங் கொள்க. குற்றியலுகரமும் அஃதேறிய மெய்யும் முன்னர்மாட்டேற்றாற் கெட்டன. உ-ம். தொண்ணூறு, எனவரும்"

என்னும் இளம்பூரணர் உரையும் உள்ளன. இதைப்போலவே தொள்ளாயிரத்துக்கும்,

'ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகார மிரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊ ஆ வாகு மியற்கைத் தென்ப
வாயிடை வருத லிகார ரகார
மீறுமெய் கெடுத்து மகார மொற்றும்''

என்னும் சூத்திரமும், "ஒன்பதென்னும் சொல்லின் முதனின்ற வொகரம் மேற்பத்தென்பதனோடு புணரும்வழிக் கூறியவாறுபோல ஒகரமிசைத் தகரவொற்று மிகும். அவ்வொகரத்தின் முன்னின்ற னகரவொற்று இரண்டு ளகரவொற்றாம். வருமொழியாகிய நூறென்னுஞ் சொல்லும் நகாரமாகிய மெய்கெட, அதன்மேலேறிய ஊகாரம் ஆகாரமாமியல்பையுடைத்தென்பர். அம்மொழியிடை, ஓரிகரமும் ரகாரமும் வரும். இதற்கீறாகிய குற்றியலுகரத்தினையும் அஃதேறி நின்ற றகார வொற்றினையுங்கெடுத்து, ஓர் மகாரம் ஒற்றாய் வந்து முடியும். எ-று. மெய்யென்றதனான், நிலைமொழிக்கணின்ற பகரம் கெடுக்க. உ-ம். தொள்ளாயிரம் எனவரும்'' என அவ்வுரையுமிருக்கின்றது. இச்சூத்திரங்களாலும் அவைகளின் உரையாலும் அறிவதென்னெனில், தொல்காப்பியஆசிரியர் ஒன்பது, பத்து, நூறு என்னும் வார்த்தைகளில் அக்ஷரங்கள் எவ்வாறுமாறின் தோல், நூறு, ஆயிரம் என்னும் பதங்களாகும் என்பதைத் தெரிவிக்கிறார் என்பதே. அவர்காட்டியவாறு அக்ஷரங்கள் ஒருங்காகப் பேதிக்கும் வழக்கம் தமிழிலும், மற்றெப்பாஷையிலுமில்லை. மேற்காட்டிய சூத்திரங்கள் பாஷாசாஸ்திரத்தின் (Philology) கொள்கைகளுக்கு முற்றுமுரணாயிருப்பதுபற்றித் தொல்காப்பியனார் சாலத்திலேயே ஒன்பது முதலிய வெண்களைக்குறித்து ஒன்றும் தெரியாமற் போய்விட்டது என்பது வெட்டென விளங்குகிறது.

இஃதிப்படியிருக்க வீரசோழியத்தில்

"* * * ஒன்பதொன்பானெடுதொண் டொள்ளும் பான்
பன்றுற்ற நூறுபதுபஃது பத்துநா றாயிரமே.''

என்றும், அதனுரையில் "ஒன்பதென்னும் எண்ணுக்கு ஒன்பானென்பதுந் தொண்ணென்பதுந் தொள்ளென்பதுமாதேசம். பத்தென்னுமெண்ணுக்குப் பானென்பதும் பன்னென்பதும் நூறென்பதும் பதுவென்பதும் பஃதென்பதும் ஆதேசமாம். நூறென்னுமெண்ணுக்கு ஆயிரமென்பதாதேசம்." என்றிருப்பது இயல்பே. ஆயின் வீரசோழியக்காரர் தொல்காப்பியக்காரரைவிட ஒருவிஷயத்திலும் தாழ்வில்லை; பழையஇலக்கணக்காரரைப்போலல்லாமல் ஒன்பது, பத்து, நூறுமுறையே தொல், நூறு, ஆயிரமாகின்றனவென்னும் விஷயத்தைச்சொல்லி அதன்மேல் ஏன் அவ்வாறாயினவென்பதை விரித்துக்கூறாது அவ்வளவோடேயே விட்டுவிட்டதுதான் விசேஷம்.

இவ்விஷயத்தில் நன்னூலார் மதமும் வீரசோழிய மதமும் ஒன்றென்பது,

"ஒன்பா னொடுபத்து நூறு மொன்றின்
முன்னதி னேனைய முரணி யொவ்வொடு
தகர நிரீஇப்பஃ தகற்றி னவ்வை
நிரலே ணளவாத் திரிப்பது நெறியே."

என்பதனால் விளங்கும். இவ்விலக்கணங்களுக்குப் பின்னர் எழுதப்பட்ட வியாகரணங்களும் இவர்கள் மதமே தழுவி எழுதப்பட்டிருத்தலால், அவைகளை ஆராயவேண்டுவதில்லை. தமிழிலக்கணங்களிவ்வாறிருக்க,

கி-பி. 1225-லிருந்த கேசவர் அல்லது கேசிராஜர் என்பவரால் கன்னடத்திலெழுதப்பட்ட கன்னடவியாகரணமாகிய 'சப்தமணி தர்ப்பண'த்தில்

"வத்துவாஊாமஹொஊவெப-வத்துதொஜெஜக்குமஹ்யஷொள்
நூறிரொஜேண் |
ஐத்தம்ஸாஸிரபிோதொநல-ஸித்தொபவெயுுஂஞஈவிபெஈயசி
ஊாஷேஸஜ ||

என்னும் சூத்திரம் காணப்படுகிறது. இதற்கு விருத்தி பிரயோகமாமாறு;

‘‘ வத்தெம்புது வரமாகிரெ ஒம்பத்தக்கெ தொம்ப எம்பாதேசக்கும்; பரமாகெ நூறிஸாஸிரங்களாகெ ஒம்பத்தக்கெ ஒம்பய் எம்பாதேசக்கும்’’ என்பதும் ‘‘தொம்பத்து, ஒம்பய்நூறு, ஒம்பய்ஸாஸிரம், தொம்பத்தொம்பய்ஸாஸிரயோஜனமம் கிவிஸிஸம்ரமிரி’’ என்பதுமே.[1] கேசிராஜர் மதமும் வீரசோழியக்காரர் மதமும் ஒன்றே என்பது இதனல் விளங்கும்.

மற்றும் கி-பி. 1604-ல் ‘கர்நாடகசப்தானுசாஸநம்’ என்று சம்ஸ்கிருதத்தில் எழுதிய கன்னட வியாகரணகாரராகிய பட்டாகளங்கதேவர்

‘‘ஒம்பத்தோஸ்தொம்பத்தெள’’

என்றுசூத்திரித்துப் பின்

‘‘ஒம்பத்து இதி அஸ்யதொம் இதி ஆதேஶஶ்ஶிஷ்டாஹ்வதி பத்துஶப்தேபரே நஹுஜ்வஸ்ஸாவெஸ | மே-வரிது நித்யம் || ’’ என்று விருத்தியும் ‘‘ஒம்பத்து, ஒம்பத்துபத்து, | தொம்மெ, தொம்பர் || பத்தவ்விதிகிம் | ஒம்பத்துநால்கு || ’’ என்று பிரயோகமும், இதனுக்கு ‘‘தொம்பத்து, நவதி: ; ஒம்பத்துபத்து, வைதிரேவ ; தொம்மெ, நவவாராஙு ; தொம்பர், நவபுருஷ: ஸ்த்ரியோவா | ஒம்பத்து நால்கு, ஷஷ்டித்ரிஶதித்யர்த்த: || என்று வியாக்கியானமும் எழுதியிருக்கிறார். மேலும்,

‘‘ஒம்பய்நூறுஸாஸிரே’’

என்று சூத்திரமும் ‘ஒம்பத்து இதி அஸ்ய ஒம்பய் இதி யாதேஶஶ்ஶிஷ்டாஹ்வதி. நூறுஶப்தே ஸாஸிரஶப்தேச பரே நஹுஜ்வஸ்ஸாவெஸ | மே-வரிது நித்யம் ||’ என்று விருத்தியும், ஒம்பய்நூறு, ஒம்பத்

(1) ‘‘பத்தென்பது வருமொழியானபோது ஒன்பதினுக்குதொம் என்பதாதேசமாகும்; பரத்தில் (வருமொழி) நூறானபோதும், ஆயிரமானபோதும் ஒன்பதினுக்கு ஒம்பய் என்றாதேசமாகும்.’’

நூறு ; ஒம்பய்ஸாஸிரம், ஒம்பத்துஸாஸிரம் ; ஒம்பய்மெ, ஒம்பய்வர் || நூறுஸாஸிரஇதிகிம் | ஒம்பத்துலக்கம் || ' எனப் பிரயோகமும், இதற்கு 'ஒம்பத்து இதி யாதேஶஸ்ய ஆதேஶஃ || ஒம்பை இதி யைஷஞ்ம் அபிகேஷிதவ்யஃ || ஒம்பய்மெ, நவவாராஃ||"

என்று வியாக்கியானமும் ஒம்பய்நூறு, ஒம்பய்ஸாஸிரம் என்னும் தொடர்களுண்டாவதற்கு விதியாகக் கூறுகிறார்.

மேற்கண்டபடி தமிழிலும் கன்னடத்திலும், இப்பதங்களைக்குறித்து இருக்கும் கஷ்டம் தெலுங்கிலில்லை. ஏனென்றால் இப்பாஷையில் முதற் பதத்தை ஆரம்பத்திலேயே தொம்மிதி என்று வைத்துக்கொண்டுவிட்டபடியால், அதினின்றுண்டாகும் தொம்மிதி பதி தொம்பை, தொம்மிதி நூறு தொம்மந்நூறு என்பன தானேபெறப்படும்.

ஆகவே திராவிடவியாகரணங்களெல்லாம் சந்தியில் ஒன்பது தொம்பது என்றாகின்றது என்று ஒரே ரீதியாய்ச் சொல்லியொழிந்தனவேயன்றி இவ்வாறாவதற்குரிய காரணத்தை விளக்கினவல்ல. ஆதலால் இவ்வெண்களின் சுவரூபத்தைப்பார்த்துப் பாஷா சாஸ்திரோக்தமாய் ஏதேனும் சொல்லக்கூடுமோவென்றாராய்வோம்.

	தமிழ்	கன்னடம்	தெலுங்கு
9.	ஒன்பது	ஒம்பத்து	தொம்மிதி
90.	தொண்ணூறு	தொம்பத்து	தொம்பை
900.	தொள்ளாயிரம்	ஒம்பய்நூறு	தொம்பன்

மேற்காட்டிய ஒன்பது வார்த்தைகளுள் தொல் என்பது போன்ற ஒருபதம், தடித்த எழுத்துடைய ஆறு வார்த்தைகளுக்கு சாமான்னியமாய் இருக்கிறது. இது தற்செயலாய் ஏற்பட்டதாகத்தோன்றவில்லை. இவ்வாறு வார்த்தைகளினியற்கையை யொட்டி, தொல் என்பது தமிழ் ஒன்பது என்னும் பதத்தின் முதலிலும் இருந்திருக்கவேண்டும் என்று ஊகிக்கலாம். அப்பொழுது இவ்வெண் தொன்பது என்றிருந்திருக்கும். இந்த ரூபம் இன்னமும் தெலுங்கில் தொம்மிதி என்பதிற் காணப்படுகிறது. இப்பழைய ரூபம் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழிலும் கன்னடத்திலும் மறைந்துவிட்டது

போலும். இந்தப் பழம்பதம் திரிந்துவிட்டதினால் தொல்காப்பிய முதலிய திராவிடவியாகரணங்களில் மாறுபாடு ஏற்பட்டன வென்பது விளங்குகிறது.

இவ்வெண்ணின் முதலிலிருந்த தகரம் மறைந்ததற்குக் காரணம் அடியிற் கூறப்போவதாயிருக்கலாமோ வென்று சங்கிக்கிறேன். அதாவது எண்டு, எட்டு என்னும் எண்களுக்குப்பின் தொம்பத்து, தொன்பது என்று வருவதில், முதல் எண்களினிறுதியிலிருக்கும் வல்லெழுத்தாகிய ட (டு) உச்சரித்தவுடனே, டகரத்தினும் மெல்லிய வல்லெழுத்தாகிய தகரம் உச்சரித்தல் கஷ்டப்படும். எண்டு தொம்பத்து, எட்டு தொன்பதுஎன்னும் இவ்விரண்டு வார்த்தைகளை அடுத்தடுத்து ஐந்து ஆறு தடவை உச்சரித்தால் தொம்பத்து தொன்பது என்பவற்றின் முதலிலிருக்கும் தகரத்தை உச்சரித்தற்குக் கஷ்டப்படும் என்பது தோன்றும். ஒருக்கால் இந்தக் காரணம்பற்றித் தகரம்கெட்டதோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது.

இனித் தோல் என்றாரம்பித்தால்அதற்கேதேனும் பொருளிருக்கவேண்டுமே என்று வினவின், அதற்கு விடை கொடுக்கக்கூடுமாவென்று யோசிப்போம். தோல் என்னும் மூலத்துக்கு தமிழிலிருப்பதுபோலவே மற்றெல்லாத்திராவிட பாஷையிலும் "பழைமை" என்னும் பொருளுண்டு. இப்பொழுது, தொல்பது தொன்பது, தொல்நூறு தொன்னூறு (தொண்ணூறு), தொல் ஆயிரம் தொல்லாயிரம் (தொள்ளாயிரம்) என்னும் பதங்கள் பழைமையான பத்து, பழைமையான நூறு, பழைமையான ஆயிரம் என்றுபொருள்படும். அஃதாவது பத்துக்குமுற்பட்டது, நூறுக்குமுற்பட்டது, ஆயிரத்துக்குமுற்பட்டது என்பது அர்த்தம் என்னலாம்.

இவ்வாறன்றி ஊனவிம்சதி, ஊனத்ரிம்சதி என்றாற்போல, ஊனபங்க்தி என்னும் வடமொழித்தொடர் ஒன்பது என்றாயிற்று என்று சங்கிப்பாருமுளர். இது வெகு பொருத்தமுள்ளதாயிருப்பினும் நாம் சித்தாந்தமாக்கிக்கொள்ளவொண்ணாது. ஏனெனின், முதலில், பங்க்தி என்னும் பதம் பத்து என்றாயிற்று என்று ஒப்புக்கொள்ளவேண்டும். அப்படியாகியிருக்கலாம் என்று கொண்டுவிடலா

ம் ; ஆயின் தகுந்தசாக்ஷிகாணேம். இஃதல்லாமல்தொண்ணூறுதொள்ளாயிரம் உண்டானதற்கு காரணம் இவ்வாற கொள்ளுவதனுல் ஏற்படாது.

இன்னும் தொள்நூறு, தொள் ஆயிரம் என்று ஒருவாறு கொள்ளுவதுண்டு. அப்பொழுது தொளைக்கப்பெற்ற (ஊனமான ; குறைபட்ட) நூறு, ஆயிரம் என்றர்த்தம் கூறுகிறுர்கள். இப்படியாயின் தொள்பத்து தொண்பத்து என்ருகித் தொண்பது, ஒண்பது, ஒன்பது என்று திரிந்திருக்கவேண்டும்.

து. அ. கோபிநாதராவ்.

பாண்டவர்காலம்.

எமது வேதபுராணேதிகாசங்களின் பழமைகண்டு ஆற்ருணுப்பெரும் பொருமைகொண்டுழலும் ஐரோப்பிய பண்டிதர் சிலருடைய கொள்கையை மெய்யென மேற்கொண்டு நம்மவருள்ளுஞ் சிலர் சிலவிஷயங்களுக்குக் காலநிருபணஞ் செய்யத்தலைப்பட்டனர். அதுவாயிலாக நமது தொல்லாசிரியர் கொள்கைகளையுங் கூற்றுக்களையும் அவமதித்து அவற்றைப் பொய்மையின்பாலனவாக்கித் தள்ளுவாராயினர்.

புராணேதிகாசங்களிலும் மற்றைய நூல்களிலும் கூறப்பட்ட அரசர் பெயர்களுள்ளே எத்தனை விக்கிரமன், எத்தனை போசன், எத்தனை நந்தன், எத்தனை குலோத்துங்கன், எத்தனை நரேந்திரன் உளர் ? ஒரு குலோத்துங்கன் பெயர் ஒரு சாசனத்திற் காணப்பட்டவிடத்து முன்பின்னுள்ள குலோத்துங்கர்களெல்லாம் இல்லாதவர்களாய் விடுகின்றுர்கள்! ஒருவன் தன் புத்திரனுக்குத் தன்றந்தைபெயரையிட்டு வழங்குதலும், அப்புத்திரன் தன்றந்தைபெயரைத் தன்மகனுக்கிட்டு வழங்குதலும், அம்மகன் தன்றந்தை பெயரைத் தன் மகனுக்கிட்டு வழங்குதலும் ஆரியாசாரமன்ருே. இப்படியே ஒரு குடும்பத்தில் ஒருபெயர் எத்தனைமுறை மீளமீள இட்டு வழங்க

ப்பட்டுவருகின்றதென்பதை யாவருமறிவர். இங்ஙனம் வழிவழி மாறிமாறி வரும் பெயர்களை நோக்காது வேறு பிரபல வேதுக்களின்றி முன்னே பதினேந்தாந் தலைமுறையிலுள்ளவோ ரநபாயனுக்கு நட்பினனுயுள்ளானைப் பின்னுள்ள அநபாயனுக்கு நட்பினனென நாட்டுதல் வல்லார்க்குக்கூடுமோயினும் அஃதுண்மையின்பாலதாமோ!

நமது தெய்வப்புலவர்களும் உத்தமகவிகளுங் கூறிய காலங்களை நிராகரிக்கப்புகுதல் முறையா? தங்காலத்துள்ளார்க்கும் தமக்குப் பின்னுள்ள எதிர்காலத்துள்ளார்க்கும் நன்மைபயக்குமென்றெண்ணிக்கைமாறுகருதாது நூல்களை இயற்றிவைத்துப்போன உபகாரத்துக்கு நாஞ்செய்யுங் கைமாறு அவர்கூறிய காலங்களை நிராகரிப்பதோ? அவர் சகாத்தம் எண்ணூறு எழுநூறெனப் பாடிவைத்த செய்யுட்களுக்கு நேரே பொருள் பண்ணுது ஐரோப்பிய பண்டிதர் கருத்துக்கிணங்கத் திரித்துப்பொருள் பண்ணப்புகுவதழகாமோ? ஐரோப்பிய பண்டிதர் ஒரேதுவை யெடுத்துக்காட்டி "இதனல் இவன் இன்ன காலத்து விளங்கியிருத்தல்வேண்டும்" என்று சந்தேகப்பொருளாகக்கூறியவற்றை, அவரைப்பின்பற்றுவார் சிறிதும் விசாரமின்றித்துணிவுப் பொருளாகக் கொள்வதென்னை?

பாண்டவர்காலம் துவாபர கலியுகசந்தியென்று நூற்பிரமாணத்தோடு பாரம்பரியமாகக் கைக்கொள்ளப்பட்டுவரும் நமது கொள்கையைப்போந்த பிரமாணமின்றி மூவாயிரத்துநூறு வருஷங்களுக்கு முற்பட்டதாகக் கொள்ளப்புகுதல் உலகமலைவாமன்றோ! நமது முன்னோர் வாக்கினும் ஐரோப்பியர் ஊகவுரை சிறந்ததாமோ? ஐரோப்பியர் பெரும்பாலாரும் உலகந்தோன்ற ஆறாயிரம் வருஷமெனக் கொள்பவராதலின் அவர்கள் நமது புராணேதிகாசங்கூறுங் காலங்களை ஒப்புக்கொள்ளார்கள். அக்கொள்கை அவர் மனத்தை விட்டு ஒருசிறிதும் நீங்காது. அதனை மனத்திடையிருத்திக்கொண்டே நமது காலங்களுக்கெல்லாம் ஊனங்கற்பிக்கின்றனர். அன்னோர்கற்பிக்குங் காலநிருபணத்தை நம்மவரும் ஆதாரமாகக்கொண்டு காலநிருபணம் பண்ணப்புகுதல் மண்குதிரைகொண்டு ஆறுதாண்டலன்றோ. நம் முன்னோர்கள் பாண்டவர்க்குப் பழமைகற்பிக்க விரும்பினவரேயாயின் பதினுயிரம் இருபதினுயிரம் வருஷங்களு

க்குமுன்னே அவனை வைத்திருக்கமாட்டாரா! அங்ஙனஞ்செய்த ற்கு நமது சிருஷ்டிகாலம் இடந்தராதா? அவர்காலத்தை உள்ள உள்ளவாறு கூறிப்போந்தாரேயன்றி ஐரோப்பிய பண்டிதரும் நம் மவரும் மெச்சிக்கொள்ளுதற்கேனும் நிராகரித்தற்கேனும் கூறினா ல்லர். அங்ஙனமாகவும் அவர் கூறிய காலத்தைத் தமது மனம் போலச் சுருங்கிய காலக்கிரமத்தோடு பொருந்தாமை நோக்கி அவ மதித்தலும் அசதியாடலுஞ் செய்யும் ஐரோப்பியராற் பெருஞ் சுட்டுப்பெறவேண்டி அவர்போல் நம்மவரும் ஆசங்கிக்கப்புகுவது பேதைமையின் பாலதாமன்றோ. உலகஞ் சிருஷ்டியாகிப் பலகோடி வருஷங்கள் சென்றனவென்றும், மனுசிருஷ்டியாகி ஐம்பது லக்ஷம் வருஷங்கள் சென்றனவென்றும் சாஸ்திர பூர்வகமாக நாட்டும் உத் தம ஐரோப்பிய பண்டிதருஞ் சிலருளரன்றோ. அவர்க்கும் நிந்தை கூறி அவர் கூற்றையுந்தள்ளித் தாங்கூறும் ஆறாயிரம் வருஷத்துக் குள்ளே எல்லாமடங்கவேண்டுமென்றும், அதனுள்ளும் நாலாயிரத் தை விருத்திகாலமாகத் தள்ள எஞ்சிய விரண்டாயிரத்தினுள்ளேயே நாகரீகந்தோன்றியதெனக் கொண்டு அக்காலத்திற்கு முற்பட்டவை களை எளிதில் நம்பலாகாதெனவுங் கொள்ளும் ஐரோப்பியபண்டி தர்பாற் பெறுஞ் சுட்டுஞ் சுட்டாமோ!

இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்தைஞ்ஞூறு வருஷங் களுக்கு முன்னே விளங்கினவரென யாவராலும் அங்கீகரிக்கப் பெற் றவரும் உத்தம வித்துவ சிகாமணியும் சோதிடசாஸ்திரத்திலும் கணிதத்திலும்தமக்கிணையில்லாதவருமாகிய வராகமிகிரர் தமதுபிரு ஹத்சங்கிதையிலே, ௧௩-ம் அத்தியாயத்திலே ௩-ம் சுலோகத்திலே, "விக்கிரம சகந்தொடங்குதற்கு இரண்டாயிரத்து ஐஞ்ஞூற்றிருபத் தாறு (2526) வருஷங்களுக்குமுன்னேயுள்ள உதிஷ்டிரன் அரசியற் காலத்திலே சப்தரிஷிகள் மகநக்ஷத்திரத்திலிருந்தன" என்றுகூறுத லின் பாண்டவர்காலம் 4500 வருஷங்களுக்கு முற்பட்டதென்பது வெள்ளிடை மலையன்றோ. [உதிஷ்டிரன்-தருமபுத்திரன்].

இங்ஙனம் சந்தேக விபரீதமறக் கரதலாமலகம்போலப் பாண் டவர்காலம் கூறப்பட்டுக்கிடப்ப, அதனை அறியாது சிலர் அவர்கால த்தை நிதானிப்போமெனக் கூறிப் பகீரதப் பிரயத்தனத்தோடு நன் னீர் தேடி நச்சுப் பொய்கை கண்டாராயினர்.

நம்முன்னோராகிய மகாவிருடிகளும் தெய்வப்புலவர்களும் பொய்யுரையாதவர்களென்பதை நன்றாக மனத்திடை யிருத்திக்கொண்டு அவர் வாக்கை மறைமொழியெனப் போற்றுதலே ஆரிய மக்களாகிய நமக்கெல்லாமுரிய கடனும். உலகத்தக விருளைப்போக்க அவதரித்துத் தீபங்களாக நூல்களையாக்கிவைத்துப்போன புண்ணிய மூர்த்திகள்,

> "எல்லாவிளக்கும்விளக்கல்லசான்றோர்க்குப்
> பொய்யாவிளக்கேவிளக்கு" என்னும்

திருக்குறளுக் கிலக்கியமானவர்களன்றோ. ஆதலால் அவர் கூறிய காலங்களைச் சித்த சமாதானத்தோடும் உண்மையெனக்கொள்ளல் வேண்டும். விளங்காமைகொண்டு ஒன்றைப்பொய்யெனத் தள்ளலாகாது. இப்போது விளங்காதன பின்னர் அறிவு விருத்தியாங் காலத்து விளக்கமாகும். கிறிஸ்து இன்னநாள் இன்ன காலத்திற் பிறந்தாரென்பதற்குப் போந்த ஆதாரமில்லாதிருக்கவும் ஐரோப்பியர் ஒப்புக்கொண்டு வழங்கி வருதலால் அவருமோர் சகபுருஷனாயினர். இக்கற்பனைசகமோ நமது உண்மைச்சகங்களை அளந்து நிலையிடுவது!!

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

அசோகன் காலத்துக்கு முந்தியும் சிலாசாசன முண்டென்பது.

தமிழிலக்க விஷயமாக யானும் ஸ்ரீமத்: கோபிநாதராயரவர்களும் எழுதியவைகளை ஆராய்ந்து சீர்தூக்கிய காரணிகர் ஸ்ரீமத்-வெங்கோபராயரவர்கள் நடுநிலைமையும் கலாவன்மையும் செந்தமிழ்ப் பத்திரிகாபிமானிகள் யாவரு மறிவர்.

அசோகன் காலத்துக்கு முந்தியும் சிலாசாசன முண்டென்றும் அதற்குப் பிரமாணம் "என்சைக்ளோ பீடியா பிரிட்டானிக்கா" (Encyclopaedia Britanica) என்னும் ஆங்கில சப்த சாகரம் என்றும் யான் கூறியது போதாதெனக் காரணிகர் கூறித் தொகுதியும்

பக்கமும் வினவுகின்றார்கள். மேற்கூறிய நூல் அகாராதியாதலின் தொகுதியும் பக்கமுங் கூறுவ தநாவசியகம். அதிலே "ரயிட்டிங்" (writing) என்னுஞ் சொல்லை நோக்கி அது சம்பந்தமாக வரும் விஷயத்திலே "போட்டகிராப்" படத்தோடு காட்டப்பட்டிருக்கும் அசோகன் காலத்துக்கு நூற்றைம்பது வருஷங்களுக்கு முந்திய சிலாசாசனத்தின் வரலாற்றைக் கண்டு தெளியுமாறு ஸ்ரீமத்-வெங்கோபராயரவர்களை வேண்டுகின்றேன்.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.

ஸ்ரீ

பாண்டவர்காலம். II.

ஸ்ரீமாந்-முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் "பாண்டவர் காலம்" பற்றி எழுதிய விஷயம் இதற்கு முன்பு அமைந்துள்ளது. பிள்ளையவர்கட்கு நம்முன்னோர்களிடமுள்ள பேரபிமானமும்பக்தியும் அவ் வியாசத்தால் நன்கு விளங்குகின்றன. ஆரியராகிய நாம் கொள்ள வேண்டியதும் அத்தகைய அன்பேயாம். பிள்ளையவர்கள் இக்காலத்துச் சரித்திரவாராய்ச்சி செய்வார் செய்யுந் தவறுகள் இன்னவையென்று விளக்கியெழுதியவற்றில் ஒருபாகம் உண்மையுடையதேயாம். ஆனல் தக்க ஆராய்ச்சி யுடையார்க்கு அத்தவறுகள் அதிகம் இரா. இயற்கையினுரிய தவறுகள் அவர்கட்குஞ் சிலவுண்டெனினும், அவைபற்றி அவர் இகழ்தற்குரிய ராகாரென்பது பிள்ளையவர்கட்கும் ஒத்ததே. ஐரோப்பியராற் பெருஞ்சுட்டுப் பெறுதல்வேண்டி முன்னோர் கூற்றுக்களை நம்மவர் இழிக்கின்றார் என்று பிள்ளையவர்கள் கருதியது, யாரேனும் ஓர் அற்பருக்குப் பொருந்துமேனும், பிரபலராக விளங்கும் பண்டிதர்க்குச் சிறிதும்ஒவ்வாதது. அங்ஙனம் நினைக்கும் அறிஞர் இங்கெவரும் இரார். ஐரோப்பியர் கொள்கையை மறுத்து நிறுத்திய அவர் விஷயங்கள் எத்தனை யில்லை? அவைகளுள் இரண்டொன்று தவறினும் பெரும்பாலவும் நன்முடிபுகளாகவே அமைந்தன. பிள்ளையவர்கள் மட்டும் தனித்துநின்று இவ்வாறு அறிஞர்க்கெல்லாம் இழுக்குக் கூறுவது முறையன்று.

தேசசரித்திரம் என்பது நாம்வழங்கியதன்று. மேனாட்டாரால் நெடுங்காலமாக மதிக்கப்பட்டுவரும் கலாவிசேடங்களுள் அஃதொன்று. நம் முன்னோர்கள் அதை ஒருகலையாக மதித்துக் கவலைசெலுத்தியவர்களல்லர். தாம் கண்டுங்கேட்டும் போந்த வரலாறுகள் அவர்களால் எழுதப்பட்டுள்ளனவாயினும், அவை சரித்திரத்துக்குரிய இலக்கணங்களோடும் அமைந்தனவாகா. அவர்கள் கூறியவற்றுட் பல விஷயங்கள் ஏனைய வரலாறுகளுடன் ஒப்பவைத்து ஆராய்தற்கும் உரியன. சரித்திரக்கலையின் சிறந்த வுறுப்புக்களுள் ஒன்றாகிய காலவரையறையை முன்னுள்ளோர் மிகுதியும் போற்றிவந்தவரென்று துணிய முடியாது. "காலங் களனே காரண மென்றிம், மூவகை யேற்றி மொழிநரு முளரே" என உள்ளதை விட்டவரல்லரோ நம்மவர். இப்போது ஆராயப்படுகின்ற ஆராய்ச்சிகளில் காலதேசங்களுக்கிணங்கப் புதிதுபுதிதாய் அமையும் கருவி கருத்துக்களின்பலத்தால் அபிப்பிராய பேதங்களுண்டாகுமாயின், அது முன்னோரைக் குறைகூறப்புகுவதாமா? நம் முன்னோரால் ஆராயப்பெற்ற வானசாஸ்திர முதலியவற்றில், இப்போது அமைந்துள்ள கருவிகளால் அவர் கருத்தோடு மாறுபடுவனவும் புதியனவுமாகிய அபிப்பிராயங்கள்வெளிவருகின்றன. அதனால் முன்னோர்க்குநேர்ந்தஇழுக்கென்னை? முன்னவர் அபிப்பிராயங்களிற் சில, பின்னோராற் றவறியவையென்று தெளியப்பட்டிருக்கவும், அவற்றைப் பூசிமெழுகுதலால், முன்னோர்க்கில்லாத புகழ் புதிதாய் விளைந்துவிடுமா? பின்னவரெல்லாம் அறிவிற்றாழவேண்டுமென்பதுந் திருவருட்கட்டளையோ? உலக விருத்தி யென்பது, முன்னோர் தொட்டதைப் பின்னோர் தொடர்தலும், பின்னோர் தொடர்ந்ததை அவர் வழியினர் முடித்தலுமென்று இவ்வாறுஇடை யீடில்லா நிகழ்ச்சியால் உண்டானதேயன்றி, சிருஷ்டியின் அற்புதங்களுளொன்றாகிய மூளையை மழுக்கிக்கொண்டதால் ஆனதன்று. நாம் இவ்வாறு கூறியதால், இக்காலத்தவர் செய்யும் ஆராய்ச்சியெல்லாம் மறுக்கத்தகாதவை யென்பது கருத்தன்று. ஆராய்ச்சியிற் பற்பல தவறுகள் நேருதலும், அங்ஙனம் நேருந் தவறுகள், கருவிகள் அகப்பட அகப்பட அவ்வக்காலங்களில் திருத்தப்பட்டு முடிவு பெறுதலும் இயற்கையே. புதியதாய் ஒரு கலை நிலைபெறவேண்டுமாயின், அதற்கு எத்தனை காலஞ்செல்லவேண்டா?

இப்போது நிரம்பியுள்ள கலைகளெல்லாம் இரண்டொருவராற் சில்லாண்டில் முற்றுப்பெற்றன என்று சொல்ல முடியுமா? இவையெல்லாம் முற்போக்குடைய மக்களுக்கு ஒருவர் சொல்லாதே இயல்பே தெரிவனவாம். நம்முன்னோர் நம்மேற் சுமத்தியுள்ள கடமைகள் பலவழியாகவும் நம்மைச்சூழ்ந்துள்ளன. நாம் அப்பெரியோர்மேற் பொழியும் வாழ்த்தும் வணக்கமும் அவ்வாறே பல துறைப்பட்டனவாம். அவர்கட்கும் நமக்கும் இடையிலுள்ள இத்தொடர்புகள், இன்னோரன்ன ஆராய்ச்சிகளால் அற்றுவிடுமென்று பிள்ளையவர்கள் அஞ்ச வேண்டிய ஆவசியகமேயில்லை.

பாண்டவர்காலத்தைப் பிள்ளையவர்கள் ஒரேஒரு காரணத்தால் ஸ்தாபித்திருக்கிறார்கள். இதை நோக்கின், அவர்கள் எதிரிகள் நியாயங்களைச் சிறிதேனும் ஆராய்ந்தவர்களாகக் காணவில்லை. பிள்ளையவர்கள்காட்டிய சுலோகம் எதிரிகள் ஆராய்ச்சிக்கு அகப்படாதது என்னும் நம்பிக்கையுடனே அவர்கள் அதை வெளியிட்டதாகத் தோற்றுகிறது. அங்ஙனம் வெளிவருதல் அறிஞர்க்கழகா? நம்முன்னோர் கூற்றை உண்மையென்று உலகறியநாட்டவேண்டின், எதிரிகள் கூறுவனவற்றை ஒவ்வொன்றாய் எடுத்து மறுத்தன்றோ ஆகவேண்டும்? அவ்வாறில்லாத வெற்றடுக்குச்சொற்கள், ஆராய்ச்சியில்லாத் துரபிமானிகளை ஒருகால்மகிழ்விக்குமாயினும், அறிஞர்க்கேற்றதாமோ? பாண்டவர்காலம் 5000ஆண்டு இல்லையென்பார்கூற்றைப் பிரபல வேதுக்களான் மறுத்துப் பிள்ளையவர்கள் நாட்டுவார்களாயின், எமக்கெல்லாம் உண்மையிற் பேருவப்பேயாம். அதுபற்றித் துரபிமானமுடையோமல்லோம். இவ்வாறன்றி யாண்டும் பரவிவருகின்ற இச்சரித்திரவாராய்ச்சி செய்வாரையெல்லாம் முறையன்றிப் பொதுப்பட இழித்துக்கூறுவதும், அவர்கட்கு உபதேசிக்கப்புகுவதும், பழங்காலத்துச் செல்லக்கூடியதாயினும், முற்போக்கில் நிற்கும்இற்றையுலகத்தவர்க்கு சமுத்திரகோஷத்தின் முன் சங்கொலிபோல் உபயோகமற்றதாகுமென்பது திண்ணம். இது கிடக்க. பிள்ளையவர்கள் துணிபாகக்கொண்ட பாண்டவர்காலம் பற்றி உசாவுவன வருமாறு:—

விஷ்ணுபுராணத்தில், பாண்டவர் வழியினராகிய பரீக்ஷித்துக்கும் மகதநாடாண்ட நந்தரிற் கடையிலிருந்த மகாபதுமநந்தனுக்கும்

இடையே 1015-வருஷங்கழிந்ததெனவும்*, வாயுமற்சபுராணங்களில் அவ்விடைக்காலம் 1050 எனவும், பாகவதத்தில் 1115-வருஷமென வும்† கூறப்பட்டுள்ளன. நந்தர்கள் 100-வருஷம் ஆண்டனரென் றும் அவரையடுத்துப் பட்டத்துக்கு வந்தவன் மவுரியவழிமுதல்வ னாகிய சந்திரகுப்தனென்றும் அப்புராணங்களே சொல்லுகின்றன. இச்சந்திரகுப்தன் 2200-வருஷங்கட்கு முன் விளங்கினவனென்பது பிள்ளையவர்களும் அறிந்ததே. ஆயின் அக்குப்தனுக்கு முன்னிரு ந்த, அஃதாவது 2200—2300 வரையிருந்த நந்தர்களிலொருவனாகிய மகாபத்மனுக்கு 1150-வருஷங்கட்குமுன் பரீக்ஷித்து அரசாண்ட னரென்று ஏற்படுகின்றது. இவற்றால் பரீக்ஷித்தின் காலம் (2300, 1151)—3451 என்பது ஆகும். மேற்கூறிய புராணக் கூற்றுக்சளின் படி பாண்டவர் காலம் 5000 வருஷமென்பதியாங்ஙனம்?

பிள்ளையவர்கள் எடுத்த சுலோகம், வராகமிகிரர் தம் நூலில் கர்க்கசித்தாந்தத்தினின்று மேற்கோளாகக்காட்டியதேயன்றி, அவரி யற்றியதன்று. பிள்ளையவர்கள் அச்சுலோகத்துக்குக் கொண்டபடி 4500-வருஷத்துக்கு மேற் பாண்டவர்காலம் ஏற்படாததென்னை? 5000-என்பது மரபாதலின் அதற்கு விரோதமாக 500-ஆண்டு கு றைத்து நிற்றலால் அச்சுலோகப்பொருள் உண்மையாகுமா? பெரு ம்பாலும் எட்டியதே எனின், அது "முக்காலே அரைக்காற்கிணறு தாண்டினான்" என்பது போன்றதுதானே? மேலும் அச்சுலோக கர்த்தாவாகிய கர்க்காசாரியர் காலம் இற்றைக்கு2100 வருஷங்கட்கு முன்னதாமென்பது முடிபாதலின், அவர்தமக்குப்பிற்பட்ட விக்ர மசகத்தை எடுத்தல்எவ்வாறியலும்? அப்பெரியவர்தமதுகணனத் தை கி. மு. 204 லிருந்த சாலிசூகனோடு முடித்தலால் கி. மு. 57-உடன் முடிந்த விக்கிரமன் காலம்வரை அவர் அதைக்கொண்டு சென் றார் என்பதற்கில்லை. இவற்றால் வராகமிகிரர் காட்டிய கர்க்கசுலோ கத்திற்குப் பிள்ளையவர்கள் கொண்ட பொருள் பொருந்துமா?

இற்றைக்கு 747 வருஷத்துக்கு முன் கல்ஹணன் என்னும் பிர சித்த பண்டிதரால் இயற்றப்பட்ட இராஜதரங்கணி என்னும் காஸ்

* 12. ஸ்கந்தம்—2. அத்தியாயம்.

† நாலாம் அமிசம்—24. அத்தியாயம்.

மீர அரசர் சரித்திரத்தில் 1800-வருஷத்துக்கு முன்னிருந்த கானிஷ்கராஜனுடைய புத்திரன் அபிமந்யுவுக்கும் பாரத அரசராகிய யுதிஷ்டிரருக்கும் இடையே 1268 வருஷங்கழிந்ததென்று சொல்லப்பட்டுள்ளது. அவர் கூறிய இவ்வளவைக்கொண்டு கணிப்பின் யுதிஷ்டிரர்காலம் (1268—1800) 3068-முன்பென்று ஆகின்றது. இஃது 5000 ஆண்டு என்பதனோடு மாறுபடாதா ?

கர்க்காசாரியர் (வராகமிகிரரால் எடுத்தாளப்பட்டவர்) சந்திரகுப்தன்வழியினனாகிய சாலிசூகனைப்பற்றி எழுதுமிடத்துத் தமது சித்தாந்த நூலில் அடியில் வருமாறு கூறுகின்றனர் :—

“மதுரையையும் பாஞ்சாலதேசத்தையும் சாகேதத்தையும் அழித்தபின் யவனர் (கிரேக்கர்) குசுமத்வஜபட்டணத்தை அணுகுவார்கள். புஷ்பபுரம்பிடிபட்டபின் மற்றமாகாணங்களெல்லாம் ஒழுங்கில்லாது நிச்சயமாக நிலைதடுமாறும். வெல்லப்படாத யவனர்கள் மத்தியதேசத்தில் தங்கமாட்டார்கள். கொடுமையும் அஞ்சத்தக்கதுமானபோர் அவர்களுக்குள்ளே நிகழும். யவனர் அழிந்தபின், யுகக்கடையில் அயோத்தியாவில் எழு வலிய அரசர் ஆளுவார்” என்பது. இவ்விஷயமே பாணினிவியாகரணத்துக்குப் பேருரையிட்ட பதஞ்சலி பகவான் தம்மகாபாஷ்யத்தில் உதாரணமுகத்தால் “யவனர் சாகேத்தைப்பிடித்தனர்” “யவனர் மத்தியதேசத்தைப் பிடித்தனர்” எனக் காட்டியுள்ளார். இப்பதஞ்சலி முனிவர் சந்திரகுப்தனது சபையையும் புஷ்பமித்திரன் சபையையும் உதாரணமாகக்காட்டுதலால் அவர் அவ்வரசர்க்குப்பின் இருந்தவரென்பது தெள்ளிது. இவ்யவனப் படையெடுப்பு அக்காலத்தில் நிகழ்ந்தமைக்குப் புறதேசக்கருவியும் சிறந்த சான்றாக வுள்ளது. மவுரிய அரசனாகிய சாலிசூகன் காலத்து விஷயமாகக் கர்க்கர் எழுதியதில் “நிகழும் யுகக்கடையில்” என்றிருப்பதற்குச் சிறந்தபொருள் யாது ?

இவ்வாறே எழுதிச்செல்லின் விஷயம் அதிகமாதலால் விரிவஞ்சிகிறுத்திக்கொண்டு, இவற்றுக்குமட்டும் தக்க விடை கூறுமாறு பிள்ளையவர்களை வேண்டுகிறேம். இவை முடிந்ததும் சோதிஷ சம்பந்தமான பல விஷயங்களை உசாவக்கூடும். மேலே காட்டியது, பாரதகாலத்தை நாம்அளந்து எழுதினபடியன்று. நம்முள்ளே

விவாதம் வளருவதினும் மற்றொரு சிறந்தவழியுள்ளது. பாரதகால விஷயமாக வேலங்தை ஸ்ரீமத்-கோபாலையரவர்கள் "Chronology of Ancient India" என்றொரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார்கள். அது சென்னை "மெஸர்ஸ். ஜி. நடேசன் அண்டு கம்பெனி" யிற் கிடைக்கும். பிள்ளையவர்கள் அதன்பேரில் உறுதியாக நிலைக்கக்கூடிய மறுப்புக்களை எழுதிப் பத்திரிகை வாயிலாகவேனும் புத்தக வாயிலாகவேனும் வெளியிடுதல் உலகோபகாரமாம். இவ்வாறல்லாதவை எழுச்சிகொண்ட ஆரியமக்களை அடக்கும் வலியற்றவை என்பது ஒருதலை.

மு. இராகவையங்கார்.

'நல்லொழுக்கம்'

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

இப்பேருலகில் மன்னுயிர்களுக்கு மகுடமும் மகிமையும் ஆவது அவரவர்களுடைய ஒழுக்கமேயாம். மனிதர்களுக்கு நற்குணமே எல்லாப் பேறுகளிலும் பெரும் பேறும். அவர்களுக்கு உயிரும் அதுவே கௌரவமு மதுவே. அனைவரும் உள்ள முவந்து அங்கீகரிக்கத்தக்க ஆஸ்தியு மதுவே. யோக்கியதை எங்தெந்த நிலைமைக்கும் பெருமையுண்டாக்கும். எவ்வளவு தாழ்ந்த ஸ்திதியையும் உயர்த்தும். சற்குணம் செல்வத்திலும் அதிகச்செல்வாக்குள்ளது. பிரசித்தி பெற வேண்டுமென்கிற பேராவலில்லாமலே பலவிதமான புகழையும் உண்டாக்கும். சற்குண முண்டாயின் அதனோடு சகல விதமான செல்வாக்கும் பெருகும். எப்படியெனில் யோக்கியதை, உண்மை, மாறுபடாத மனவுறுதியாகிய நற்குணங்களே செல்வாக்கை யுண்டாக்குகின்றவை. மனிதர்களுக்கு நற்குணங்கள் உள்ளவரிடத்தில் உண்டாகும் நம்பிக்கையும் மதிப்பும் மற்றெந்த குணமுள்ளவரிடத்திலும் உண்டாவதில்லை.

"ஒருதேசத்தை உயர்த்துவதும் ஒருதேசத்தைப் பலப்படுத்துவதும், ஒருதேசத்திற்கு மகத்துவம் உண்டாக்குவதும், அதன் அதிகாரத்தைப் பரப்பி அதற்குச் செல்வாக்கு உண்டாகப் பிறர் அதற்கு அடங்கி அதை அபிமானிக்கும்படி செய்வதும், இலக்ஷாதிலக்ஷம் பெயருடைய இருதயத்தை வணக்கி அதற்கு முன் இதர தேசத்தார்கள் சர்வம் அடங்கித் தலை வணங்கும்படி செய்வதும், கீழ்ப்படியச் செய்வதற்கு ஏற்றகருவியும், மேன்மை பெறுவதற்கு மூலாதாரமாயிருப்பதும், ஒரு தேசத்தார்க்கு மெய்யான சிங்காசனம், கிரீடம், செங்கோல் ஆகிய இவைகளை விளைவிப்பதும், ஒருவருடையகுலப் பெருமையல்ல; நாகரீகப்பெருமையுமல்ல; புத்திவிவேகங்களின் திறமைமாத்திரமுமல்ல ; பின்னென்னவெனில், நல்லொழுக்கமாகிய யோக்கியதையின் பெருமையேயாம். இதுவே மனிதருக்கு மெய்யான குலவிருது வித்தையாம்."

யோக்கியதை யென்பது மனிதனுடைய நல்ல சுபாவத்திற்கு ஓர் பேரடையாளமாம். அது நீதிநெறியே வடிவெடுத்து வந்ததன்றி வேறல்ல. நற்குண முள்ளவர்கள், மற்றெல்லோரும் தத்தமிருதயம் போலவே நம்புவதற் கிடமாயிருப்பது மாத்திரமேயன்றி, செம்மையாய் அரசாளப்படும்இராசாங்க மனைத்திலும் உபயோகமானகாரியமனைத்தையும் நடத்துவதற்குரிய சிறந்தமுதற்காரணமுமாகின்றார்கள். ஏனெனில் முக்கியமாய் இவ் வுலகத்தை யாள்வன நீதிநெறிகளேயன்றி வேறல்ல. ஒரு தேசத்தின் பலம் தொழில் நாகரீகம், இவையனைத்திற்கு மாதாரம் அங்கங்குள்ள மனிதர்களுடைய நடத்தையே. தேசரக்ஷணத்திற்கு மூலாதாரமும், இதுவே. சட்டதிட்டங்களும், நிபந்தனைகளும் இதினின்று உற்பத்தியானவையே. கடவுளுடையகோதை கருணையால் இந்தப் பிரபஞ்சத்தில் சகலதேச ஜாதி மதஸ்தர்களுக்கும் அவரவர் நடத்தைக்கு ஏற்றவண்ணம் இன்பத்துன்பங்கள் அமையுமே யன்றி மற்றப்படி யமையா. ஒரு காரிய முண்டானல் அதற்குக் காரணமுமுண்டென்பது எப்படிநிச்சயமோ, அப்படியே அவரவருடைய நடத்தையும் அததற்கேற்ற பயனை விளைவிக்குமென்பது நிச்சயம்.

ஒருவன் அறிவிற் பண்படாதிருப்பினும் அற்ப சாமர்த்திய முள்ளவனயிருப்பினும், தனஞ்சிறியனயிருப்பினும் அவன் ஒழுக்கமட்

டும் மாற்றுயர்ந்திருக்குமானல் எவ்விதத்திலாயினும் அவன் மேன் மையை அடைவான் என்பதற்குச் சந்தேகமில்லை. நல்லஇருதய பரி பாகமுள்ள அனைவருக்கும் அமையத்தக்கதான விவேகம், ஒழுக்கம், உழைப்பு, ஈவு, இரக்கம் முதலிய நற்குணங்கள் மட்டு மிருந்தாற் போதும்; இவைகளைக் கொண்டு ஒருவன் எதைத்தான் சாதிக்கமா ட்டான்? கல்வி, குணநலம் இவற்றின் உதவி மட்டு மிருக்குமாயின் எவ்வளவு அற்ப சாமர்த்தியவானாயினும், மற்றெந்தப்பொருளின் உதவியும் சிறிது மில்லாமலே உலக விபார விஷயத்தில் எவ்வளவு போட்டிகளும் பொறாமைகளு மிருந்தாலும், அவற்றின் நடுவண்தா மே மேலிட்டு எவ்வகை அருந்தொழிலும் செய்ய மாட்டுவான். பதவி எவ்வளவு உயர்ந்திருப்பினும், எவ்வளவு தாழ்ந்திருப்பினும் யோக் கியதை யுடையோருக்கு எக்காலமும் மதிப்புண்டாம்.

ஒருவனுடையவாய்மொழியையும் ஆதாரவாகக்கொண்டுநிற்காத உண்மை, மனநிறை, நன்மையாகிய இவைகளே ஒருவனுடைய கு ணங்களில் முக்கியமானவை. அவைகளே சுகிர்தத்திற்குக் கைமாறின் றித் தொழும்புசெய்யத்தக்க உள்ளத்திற்பிறந்த ராஜபக்தராம். இக் குணங்களோடு மனவுறுதியும் சேருமாயின் ஒருவனுடைய வல்லமை க்குத் தடை யாது? அவன் நன்மை செய்தற்குச் சலியான். தீமை களை வெல்வதற்குப் பின்வாங்கமாட்டான். எப்படிப்பட்ட வருத் தங்களையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் உத்தரிக்கவும் வல்லவனாகின் றான். மனநிலை மாறாத நெறியோனுடைய சற்குணம் நன்றாய்ப் பிர காசிப்பது அவனுடைய கஷ்டகாலத்திலேதான். மற்றவை யெல் லாம் துணைநில்லாது தவறிப்போக, மனநிறையும் ஆண்மையுமே அப் போது அவனுக்கு முக்கியாதாரமாகின்றன. ஆகவே நன்னடக்கை யுடைமையே இவ்வுலகில் உயர்ந்த பெறும்பேறு என்று ஒவ்வொருவ னும் அதைத் தனித்தனி நாடுவது கடன்.

உயர்ந்த பதவியை அனுசரித்து ஒழுகும் ஒழுக்கமும் சிந்தையு முள்ளவன் அப்படிப்பட்ட எண்ணம் சிறிதேனும் இல்லாதவனைப் பார்க்கிலும் மிக மேன்மை பெறுவானென்பதற்கு ஐயமில்லை. மிகவு யர்ந்த சித்தி பெற எத்தனிக்கிற எவனும் தான் ஆதியிலிருந்த நிலை க்கு வெகுதூரம் உயர்ந்த நிலையை அடையாமற்போகான். ஒருவன்

அடைந்த பதவியானது தான் பெற நினைத்து முயன்ற பதவிக்கு மிக வும் இளைத்திருப்பினும் உயர்ந்தோங்க வேண்டுமெனச் செய்த எத்த னம் தன்னளவில் எப்பொழுதும் பயன்படாதிராது.

வெளிக்குத்தோன்றுகிறபடியே உள்ளத்திலுமிருப்பது ஒருவ னுக்கு அத்தியாவசியமாம். ஒருவனுக்கு உரையும், ஒழுக்கமும், உள்ளமும் ஒத்திருக்கவேண்டும். சொல்லிலும் செயலிலும் நிறைவு டைமையே யோக்கியதைக்கு முதுகெலும்பு என்னலாம். பக்திபூர்வ மாய் வாய்மையைச் சார்ந்து ஒழுகும் ஒழுக்கம் அதன் முக்கிய லக்ஷணமாம். சொல்லிலன்றிச் செயலிலும் உண்மையுடைமை யோக் கியதையின் மேன்மைக்குப் பிரதானம். தன்னையும் மதித்துப் பிறனை யும் பெருமைப்படுத்தும் தன்மையுள்ள ஒவ்வொருவனும் சொன்ன சொற்படி தவருது செய்து ஒன்றிலும் பொய் புரட்டு இல்லாமல் நடக்கக்கடவன். மெய்மையுடையோன் அந்தரங்கத்திலும் பகிரங் கத்திலும் செய்வதை நேர்மையாகச் செய்வான். இவ்வித தர்மபுத்தி ஒருவனிடத்தில் உளதாயின் அது அவனுடைய குணத்தை நாழிகை தோறும் நாள் தோறும் உருவாக்கி அவனை மேன்மை பெறச்செய்கி றது.

நல்லஅப்பியாசத்தினல் ஒருவனுடையயோக்கியதை எவ்வளவு அதிகமாய் உறுதிப்பட்டு நிலைநிறுத்தப்படும் என்பதைச்சற்றுவிசாரி ப் போமாக. அப்பியாசங்களின்கூட்டமே மனிதனுவன். அதுவே இ யற்கைக்கு இரண்டாவதாம். ஆனதுபற்றியே, கெட்ட வழக்கம் யா தொன்றும் நம்மேல் வந்தேருவண்ணம் மிகுகவனமும் சாக்கிரதையு மாயிருக்கவேண்டுவதவசியம்; ஏனெனில் ஒருவன்குணம் ஒருமுறை தவறியஇலக்கு எதுவோ அதில்அக்குணத்திற்கு எப்பொழுதும் துர் ப்பலம்தான். ஒருமுறை நெறிதவறிச் சிருக்குவந்தவனுக்கு ஒருபொ ழுதும் நெறிதவருதிருந்தவனைப் போல் அத்தனை யுறுதியுண்டாகக் காலஞ் செல்லும். எங்கே பயின்ருலும் பழக்கம் நம்முடைய எத்தனமின்றி நமக்குத் தோன்ருவண்ணமே யியலும். முதலிற் ப ழக்கத்திற்குச் சிலந்தி நூலினும் அதிக பலமில்லை யெனத் தோன்றக் கூடும். ஆனல் எதையும் ஒரு முறை பயின்று வருவித்துக் கொண் டால் அப்பால் அந்தப் பயிற்சி நம்மை இருப்புச்சங்கிலியாற் கட்டிக்

கொள்வதுபோல் இறுகக்கட்டிக்கொள்ளும். ஆகவே ஒருவன் ஆயுள் காலத்தில் தனித்தனி நடக்கும் சிறிய சங்கதிகளும் ஒன்று சேர்ந்து பெருமலையாகிவிடும். ஒருவனுடைய மானம், கருத்து, முயற்சி, மன நிறை இவை யனைத்தும் கேவலம் எண்ணத்தினுல் அமைகின்றவைக ளல்ல, அவைகளுக்குப் பழக்கமே முதற் காரணமாம். நமக்குப் பரு வம் ஏறஏற, நமக்குச்சுதந்தரமான பிரவிர்த்தியிலும் நாமெனப்படுவ திலும் ஒருபாகம் பழக்கத்தில் தொங்கி நிற்கும்படியாகின்றது. சிறு பருவத்தில் நற் பழக்கம் அமைவது மிகவெளிது. அமைந்த பழக் கம் ஜீவன் உள்ளளவும் நிலைபெறும். "இளமையிற்கல்" என்னு ஔ வையார்சொன்னது இதனையே வற்புறுத்தும். பருவம்ஏறப் பழக்கத் திற்கு பலம் ஏறி யோக்கியதைக்கு உருவம் அமைவதினுல் நூதன வழியில் விலகுவது மேன்மேலும் கஷ்டமாம். ஆனது பற்றியே சற் குணமும் மன நிறையும் ஒருவன் பாலியத்திலிருந்தே பழகி வந்து மேன்மேல் வயது உடையவனுக ஆக சன்மார்க்கத்திற் சிறிதேனும் குறையாது நடப்பானுகில், அவனே இப்பூமிக்கு ஒருதிலகமாவான்.

சாதுக்கள், தம்பெருமையைத் தாம் அறியுந்திறமையுடைமைக் காகவே மேலாகக்கொண்டாடப்படுகின்றனர். அவர்கள் தமதுகு ணத்தை மதிப்பது அது மேலுக்குத்தோன்றுமளவு மாத்திரமே யல்ல; தம்மனச்சாக்ஷிக்கு மெய்ப்படஉள்ளதென்று தன் மனதுக்குத் தோன்றுமளவேயாம். அவர்களுக்குத்தம்மானமும் உண்டு, அம்மு றையே பிறர்மானமும்உண்டு. தண்ணளி அவர்கள்கண்ணுக்குத் திவ் வியகுணமாயிருக்கும். அதினின்று உற்பத்தியாவன விநயம் தயை அன்பு பொறை அடக்கமிவைகளாம். சாந்தகுணம் மேன்மக் களுடைய யோக்கியதைக்கு உத்தமபிரமாணமென்பது மெய்யே. தன்னில் இழிந்தோர் தன்னைச்சார்ந்தோர் தனக்கு ஒப்பாவோர் ஆகிய பிறருடைய மனதை வருத்தலாகாதென்று நினைவிலிருத்திக் கொள்ளும் இயற்கையும், அவர்கள்மானத்தை அபிமானிக்குமியல்பும் சுத்தசாதுவின் ஒழுக்கம் அனைத்திலும் வியாபித்திருக்கும். அவன் தன் பாக்கியத்தையும் பலத்தையும் யோக்கியதையையும் குறித்து விம்புபாராட்டான். கருமம் சித்தித்ததென்று அவன் மனம் பூரிப் பதில்லை. சிதறியதென்று மெத்தவும் குன்றிப்போவதில்லை. தன்

கருத்துக்களைப்பிறருக்கு வலிந்துசொல்லான். ஆனால்சமயத்தில் தன் மனக்கருத்தை ஒளிக்காமல் தாராளமாய் எடுத்துரைப்பான். அவன் கைமாறொன்றையும் எதிர்பார்த்துஉபகாரம் செய்யான். இவ்விதமான சன்மார்க்கங்களை ஒவ்வொருவனும் படியெடுத்தொழுகுவானாக.

இனி ஒழுக்கத்தின் வல்லமையைப்பற்றி எவ்வாறு புகழ்வாம், புகழப்புகின் நம்மால் மாளாது. ஆயினும் கடைசியாக தென்னிஸன் (Poet Tenneyson)சொல்வதை எடுத்துக்காட்டி வியாசத்தை முடித்து விடுவோம்.

" தன்னிடத்தில் விளங்கிய சாத்விகமனைத்திலும் குறையாமல் பின்னும் ஆயிரம்மடங்கு அதிகம் உண்டென நெஞ்சார நினைவார அறிந்திருப்பவனும், ஒழுக்கமும் உள்ளமும் ஒத்திருப்பவனும், நால்வருடன் கலந்துறவாடும்பொழுது செய்யும் உபசாரமனைத்தோடுங்கூட உதாரமதியுள்ள சிந்தையில்முளைத்தெழுந்த செடியிற்பூத்தமலர்போலும் சிறந்தநல்லொழுக்கம் இணைந்திருக்கப்பெறுவோனும், சாதுஎனும்மகத்தான பூர்வநாமத்தை ஏசுவாரின்றித்தரித்துக்கொள்வோனுமாகிய இவர்களைத்தவிர, எப்பொழுதும் செய்கையில் வல்லவர்யாவர்?

T. N. பார்த்தசாரதி ஐயங்கார்.

பாலமுது.

(The Nectar of Milk.)

பாலமுதென்பது பாலாகியவமுதென்று பொருள்படும். பாலாவது பசுவின்பால், சாக்காட்டைப் போக்கவல்லது அதுவாம். ஆதலால் பாலின் கண் சாக்காட்டை யழிக்கவல்ல குணமொன்றிருப்பின் பாலமுதென்ற அடை மொழியுடன் பாலைத் துதித்தல் பொருந்தும். தேவர்களுண்ணு முணவை அமுதமென்றே கூறுவர். நமது இந்து தேசத்திற்கு மேற்கே ஐரோப்பாவின் தெற்குப் பக்கத்திலுள்ள க்ரீஸ் (Greece) என்னும் தேசமானது புராதன ஆசாரங்களையுங் கோட்பாடுகளையுங் கொண்டதோர் தேயமாகும். க்ரீஸ் தேசத்தையும் இந்துதேசத்தையும் பல வகையாக ஒப்பிட்டு

ப்பார்த்துப் பூர்விகமாகவுள்ள அநுஷ்டானங்களையும் தத்வஞான கலாசாத்திரப்பொருள்களையுங் கொண்டு நன்குமதித்து வருகின்றார்கள். இதற்கோருதாரணமாக க்ரீஸ் தேசத்தில், நமது நாட்டில் யாம் தேவர்களிருப்பதாகவும் அவர்களது உணவும் வாழ்க்கையும் மானிடவுணவுவாழ்க்கைகளினும் வெகுமடங்கு சிறந்தனவாயும் நம்பி வருவது போலவே, அத்தேயத்தார் தேவர்களினிருப்பை நம்பி அவரது உணவை தேவதான்னமாகக் கருதி பக்ஷியத்திற்கு அதாவது சாப்பாட்டுக்கு "ambrosia" என்றும் பானத்திற்கு அதாவது குடிக்கு "nectar" என்றும் உணவை வகுத்துத் தனிப்பெயரிட்டுக் கூறுவர் ஆதலால் மானிட யாக்கையினுமதிகமாய்ப்பொலிவினும் மேம்பாட்டினும் விளங்கப்பெற்ற தேவயாக்கைக்குரிய பானம் அம்ருத அல்லது அமுத பானமாம். எங்கு முயர்வாகக் கொண்டாடப்பட்ட பசுவின் பாலானது எவ்வாறு ஓர் வித அமுத பானமாக வெண்ணித் துதித்தற்பால தென்றும் அத்தகைப்பாலமுதை எக்காரணங்களால் எவ்வாறு பரிசோதித்துப் பாதுகாக்கவேண்டுமென்றும் சாமானியத் தோற்றங்களையும் இரசாயனத்தோற்றங்களையும் கொண்டு ஒருவாறு தேர்ந்து பார்ப்போமாக.

நமது யாக்கை பற்பல அவயவங்களாகக்கொண்டுள்ளது. அவயவங்கள் ஒன்றன் பின் ஒன்றாகச் சோர்வை யடையின் யாக்கையும் சோர்ந்துபோம். அவ்வவ் அவயவங்களுக் குரித்தான செயல்களைச் செலுத்திவந்தாற்றான் யாக்கை பிழைத்திருப்பது போற் புலப்பட வல்லது. ஒருவன் சம்மட்டியினாற் பலதரம் அடித்து வந்தக்கால் கைசோர்வடையலாகும். அவ்விதமடிக்க அடிக்கச் சோர்ந்து, கால் சோர்ந்து கடையில் மெய் சோர்வை யடையும். இத்தகைய சோர்வு மிகுதியினால் தேகவசைவுங் குறையும். அசைவு குறையக் குறைய அழிவுண்டாகுதல் திண்ணம். ஆதலால் அழிவிற்குக் காரணமாகிய உடற் செயலை எவ்வாறு நிறுத்தலாகும்? நாம் அவயவங்களினாற் செய்ய வேண்டுஞ் செய்கைகளை இடைவிடாது நடத்திவரச் சோர்வாகிய அழிவை நீக்க வல்ல உணவை உட்கொள்ளத்தான் வேண்டும். ஆதலால் நாழிகைதோறும் உண்டாகும் நமது யாக்கையினழிவைப் போக்க வல்ல அமுதும் நமது உணவே யாகும்.

நமது யாக்கையினது செயற்கைக்குத் தக்கபடி எவ்வாறு உண

வானது உடலிற் பொருந்த தேகம் ஒரே தன்மையிற் றங்குவது போற் காண்கிறதென்பதைத்தெளிந்தபின் அன்னத்தின்கண் உண்டாகிய சூக்ஷ்ம ஜீவாதாரப் பொருள்கள் பாலின்கண்ணு முண்டென்பதாய்த் தேர்ந்தறிவோமாகில் பால் அன்னத்தை மதித்து அஃதோர் நித்தியச் சாக்காட்டை யழிக்கவல்ல அமுதமென்றே நிச்சயிக்க வல்லதேயாம். ஆகையால் ஆரம்பத்தில் நாம் சோர்வடைதலாவது எவ்வாறு என்றும், அதன்பின் சோர்வை நீக்கி உடற்கு நிதானத்தைக் கொடுக்கவல்ல சூக்ஷ்ம ஜீவாதாரங்கள் யாவை, எவ்வகை நிதானத்தை உண்டுபண்ணுகின்றன? வென்றுங், கடைசியில் பாலில் அச்சிவாதாரப் பொருள்கள் எவ்வாறுள வென்றுந் தேர்ந்து அச்சிவாதாரப் பொருள்கள் கெடாமலிருக்கப் பாலை எவ்வாறு பாதுகாக்க வேண்டு மென்பதையு மறிவோமாகில், நமது இல்லற வாழ்க்கையைப் பயன்படுத்தி (benefitting by domestic economy) சுகமாகக் காலங்கழிக்கலாகும்.

முதலாவது :—உடற்சோர்விற்குக் காரணம்.

மாட்டுக் கொழுப்பாலாகிய மெழுகுத் தீபத்தை எரிப்பின் கொழுப்பானது கரைந்து கடைசியில் மறைகின்றது. அதன் காரணம் யாது? மாட்டுக் கொழுப்பாவது என்ன? அஃது அவ்வாறு எரிவதினின்றும் பெறவல்ல பொருள்கள் யாவை? இக்கேள்விகளை நன்குகத் தேர்ந்து விடை கூறியபின் அதனாலடைய வல்ல நியாயங்களை யாதாரமாகக் கொண்டு நமது உடற் சோர்வையும் அதனாலுண்டாம் பசியையும் தாகத்தையும் சரிவர வுணர்ந்து நமது உணவினது செயற்கையையும் செயலையும் பிழையின்றி யறிந்து வரலாம். நிணம் அல்லது கொழுப்பென்னு மோர் பொருளானது மானிடர்களினும் மிருகங்களினும், தாவரங்களினும் பரவியுள்ளது. நிண மில்லாவிடில் நமது உடல் இளைக்கும். உணவு குறைய நிணமுங் குறையும். ஆதலாற்றான் ஆகாரத்தில் வேண்டுமளவு நிணம் பெறாதவை யெல்லாம் தேகமுலர்ந்து சோர்கின்றன. எள்ளினின்று எடுக்கப்பட்ட எண்ணெயானது எள்ளின் நிணமாம். பாலினின் றெடுக்கப்பட்ட வெண்ணெ யானது பாலினது நிணமாம். உடலில் மாமிசத்தைச் சுற்றி மேலே பரவியுள்ள வெண்ணிறப் பொருளும் நிணமாம். இவ்

வகையான நிணமானது எரிய வல்லது. சற்றுத்தீப்பட்டக்கால் உரு கவும் வல்லது. எண்ணெயைக் காய்த்தால் அது உருகி மேல் வழி கிறது. வெண்ணெயைக் காய்த்தாலும் அவ்வாறே உருகுவதாயுள் ளது. ஓர் கண்ணாடிப் புட்டியில் சிறிது நீரையும் எண்ணெயையும் வி ட்டு நன்றாக அசைத்துக் கலக்கிவிட்டால் எண்ணெயானது சிறு தூள் களைப்போல நீரெங்கும் பரவி மங்கலாகத் தோன்றும். ஒவ்வொரு சிறு தூளையும் பூதக் கண்ணாடியின் கீழ் நோக்கின் வட்ட வடிவு பெற் றிருத்தலைக் காணலாகும். மேலும் அது சற்று மஞ்சள் நிறம் பெற்றுள்ளது போலவும் காண்பதாயுள்ளது. அதன்மேல் சூரியனது இரேகை தாக்கப் பெற்றால் அவ்வொளி பிரதிபலிக்கத் தக்கது. ஓர் நிலைக்கண்ணாடியின் மீது தாக்குவதாகிய ஒளி எவ்விதம் பிரதி பலிக்கப்பெறுகிறதோ அவ்விதமே ஒளியானது எண்ணெய்த் தூள்க ளினின்றும் பிரதிபலிக்கப்பெறுகிறது. மற்றும் கன பதார்த்தமாகிய தோர் பிண்ணாக்கின் மீது (oil cake) ஒளிபட்டக்கால் பிண்ணாக்கு சற்று பளபளப்பாயுள்ளது. இதன் காரணம் பிண்ணாக்கின்கண் பா வியுள்ள சிறிய எண்ணெய்த் தூள்கள்தான். தேர்ந்தெடுத்த வாகார த்தை விருப்புடன் உண்டு செவ்வை பெற்று வரும் மாந்தரதுடல் ஓர் விதப் பொலிவையும், வழ வழப்பையும், காந்தியையும் பெற் றுள்ளது. அஃதின்றி ஆகார வியல்பைச் சற்றுங்கருதாது உடல் வளர்க்க வெண்ணி உருவளர்க்கவெண்ணாது பசியைத் தீர்க்கும்வ ண்ண முண்டுவரும் மாந்தரது மேனி பொலிவிலுங் காந்தியிலும் சற்றுக் குறைவுபட்டுத் தானிருக்கும். இதன் காரணம் முன்சொல் லி வந்த நிணக்கலப்பின்பாலதேயாம். சற்றேறக்குறைய எவ்வகை மிருகத்திலுந் தாவரப் பொருளினும் நிணமுள்ளதாகும். எள்ளி னின் றெடுக்கப்பட்ட எண்ணெய் அதனைவிட்டு நீங்கியபின் பிண் ணாக்கைத் தருவதாயுள்ளது. அப்பிண்ணாக்கினும் சற்று எண்ணெ யுள்ளதாக அதன் மேலுள்ள பளபளப்பினின்றும் அறிந்து (இது வெற்றுக்காட்சி.) அதைப்பொடியாக்கி சாராயத்தினின்றும்(alcohol) பெற வல்லதோர் சாராயச்சூக்ஷ்மத்தண்ணீரில் (ether) கலந்து காய் ச்சினால் பிண்ணாக்கிற் பரவியுள்ள எண்ணெயானது சூக்ஷ்மத்தண்ணீ ரிற் கரைந்து, பிறகு எண்ணெய் கரையப்பெற்ற சூக்ஷ்மத் தண்ணீ ரை மெதுவாகக் காய்ச்ச எண்ணெயைவிட்டு சூக்ஷ்மத் தண்ணீர்

விலகும். (இது இரசாயனத் தோற்றம்.) இவ்வாறே பாலினுள்ளும் நிணமிருக்கக் காணக்கூடியதுதான். நிணமதிகமாகவுடைய பாலைச் சிறந்த பாலாகச் சொல்ல வேண்டும். ஏனெனிற் பாலின் நிணம் மானிடருக்குப் பொலிவுங் காந்தியுந் தரவல்லது.

நாமுண்ணு முணவில் இருவகைப்பதார்த்தங்கள் கலந்துள்ளன. அவைகளின் செயலுக்குத் தக்கபடி அங்ககுண சாஸ்திரத்தில் "Physiology" எனப்பெயரிட்டுவருவர். அவைகளில் ஒன்று தேகவுஷ்ணமுண்டாக்குவ தென்றும் (Heat Producer) மற்றொன்று தேகத்திற்காதார முண்டுபண்ணுவ தென்றும் (Tissue Former) சொல்லியுளார். ஓர் விளக்கெரிய வேண்டின் நிணமாகிய எண்ணெயை உபயோகிப்பது போலவே நமது தேகத்தில் உஷ்ணம் குறைவுபடாது தேகத்தைக் காப்பாற்ற நிணப்பொருள் ஒன்று வேண்டுகிறோம். அவ்வகை நிணப்பொருள் முக்கியமாய்ப் பாலினின்று யாம் பெற வல்லோம். ஆதலாற் பாலானது நமது சுகவாழ்க்கைக் கின்றியமையாததெனத் தெளிவாகிறது. நிணத்தின் பொருட்டும் தாவரக்கறியைப் பக்குவப்படுத்தி யுண்ணும் பொருட்டும் நல்லெண்ணெயையும் (Gingelly oil) உபயோகித்து வருகிறோம். இத்தகைய நிணமானது, இரசாயன பரீக்ஷையினால், சுத்தக்கரி (carbon), ஜலவாயு (hydrogen) பிராணவாயு (oxygen) ஆகிய இவைகள் ஓரளவிற் சேர்ந்துண்டானதாகத் தேர்ந்திருக்கின்றனர். (தொடரும்).

செ. வீ. இராஜகோபாலாசாரி,
நார்மல்ஸ்கூல், மதுரை.

தனிச்செய்யுட்கோவை.

(தொடர்ச்சி.)

பழனி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் இராமநாதபுரத்திற்கு வந்திருந்தபோது, "கிரியிற் கிரியுருகுங் கேட்டு" என்று ஈற்றடி யெடுத்துக் கொடுக்கச் சொல்லிய வெண்பா.

மாலாம்பொன்னுச்சாமிமன்னர்பிரானன்னாட்டிற்
சேலாங்கண்மங்கையர்வாசிக்குநல்யாழ்—நீலாம்
பரியிற்பரியகொடும்பாலைகுளிரும்மா
கிரியிற்கிரியுருகுங்கேட்டு.

*

அவரைப் பாராச் சேவகர் தடுத்தபோது சொல்லிய கவி.

தருமகுணமிகுதின துசமுகமுருர்வறுமையெனச்சலிக்கக்காய்ந்து
வருமிரவிவெயிலதனுன் மயங்கியின்றுநானிங்குவந்தபோழ்தி
லருமைதவிர்பாராச்சேவகர்தமதுபெயர்ப்பொருளையறியக்காட்டிக்
கருவமொடுதடுப்பதென்னேகாமர்பொன்னுச்சாமியெனுங்கருணைமா
[லே.

அவர்க்குச் சுரம் வந்து தீர்ந்த போது கூறிய கவி.

சொற்செறிமுத்தமிழ்வலர்க்குத்துரங்கமணிச்சரங்கவிகைதுலங்குதந்தப்
பொற்சிவிகைமுதலவருள்புனிதபொன்னுசாமியெனும்புயலேயுன்றன்
மற்செழுந்தண்கருணைநெடுமழைநனைப்பவதனுலென்வறுமைமாய
முற்சுரமும்பிற்சிவந்தமுதுசுரமுமிகவயலாய்முடிந்தமாதோ.

படி திட்டஞ் செய்யவேண்டுமென்று கூறியகவி.

கனப்படிவமிதுவெனும்பொற்கமலகரதலசுமுகாகனிந்தசெந்தே, னனப்
படிவண்டிமிர்குழற்பொன்னிணங்குபொன்னுச்சாமிமன்னு வியம்பக்கேண்
மோ, மனப்படிநானினைத்தபடிவந்துபடிப்படியுணர்த்தமாட்டேனின்னே,
தினப்படியிப்படியுனக்குச்செலும்படியென்ருெருபடிநீசெய்குவாயே.

வெளிப்படையிற் பிராது சமாசாரங்கள் விளங்கக் கூறிய கவி.

ஓர் தலைவி கூற்று.

சீரிலகுதாராபுரந்தாலுகாதாசில்செய்யுமகாராசராச
சீகண்யபார்த்தசாரதிமுதலியார்தமதுதிவ்யசமுகத்தினுக்கு [பா
நேரிலெழுதிக்கொண்டவிண்ணப்பமென்னவெனினேற்றிராப்போதுகுப்
னெடுநாட்குறிப்பினுலேயென்னகத்தெய்திநிறையுடைமையைத்திரு
காரியமெவர்க்குந்தெரிந்ததேமச்சமுங்கைக்குள்ளிருக்கின்றதாங் [டினுன்
காண்பதெளிதல்லவாரண்டிற்பிடித்திடுதல்கடன்மையினிலாவுமுளது
கூரியபழங்குற்றவாளிகளுமுதவியக்கொடியதுட்டனையடக்கக்
கூடாவிடிற்சோரகுணமொடுங்காதுதயைகூர்ந்திரட்சித்தருள்கவே.

இக்கவியிலேதலைவியைக்குறித்துப்பொருள்கூறுங்கால், இராப்போது
குப்பான் - இராத்திரியிற் புட்பபாணத்தைச் சொரிபவனுகிய மன்மதன்.
அகம் - மனம். நிறையுடைமை - கற்பாகியவுடைமைப் பொருள். மச்சம் -
மீனக்கொடி. வாரண்டில் - கச்சுப்பொருந்திய தானமாகிய முலை. இனிலா.

இனிய நிலா. பழங்குற்றவாளி - பூர்வமான குற்றத்தைச் செய்கின்ற பாணம். சோரகுணம் - மயக்கத்தாற் சோர்கின்ற அருணம் எனப்பொருள் கொள்க.

ஆபத்துக்காத்தபிள்ளையென்பவர் வாசகங்களை அடைமொழி யின்றி அநேகங் கவிகளாகப் பாடியிருப்ப அவற்றைக்கேட்டு வியந்து கூறியகவி.

அருமணலைக்கயிறுதிரித்தாங்குலகவாசகமேயமைபாட்டாகத்
தருநினதுநன் மகிமைத்தரத்தைநினைக்குந்தொறுமாச்சரியம்யார்க்கும்
வருமொருவர்க்கெளிதலவிம்மார்க்கமம்மாகலசமுனிவனுங்குன்றுற்றான்
கருமுகில்கற்பகமலர்ப்பூங்காவொத்தவாபத்துக்காத்தவேளே.

மணியுரகபதிநாலுல்வணங்கினன்பின்புற்றிருந்தான்வனவான்மீக
னணிகலசமுனிபயங்கொண்டனன்வாணிமறைவாய்நின்றலர்மேலானு
டணிவரியவுனதுகவித்தரந்தெரிந்தென்றாலுனக்குச்சமானம்யார்காண்
கணிதமுள்ளசகலகலைகளுமுணருமாபத்துக்காத்தவேளே.

யோகினியை யறியும்படி ஒருகவி பாடித்தரவேண்டும் என்ற போது கூறியகவி.

நிறைமதிமுற்றிதிதொடுத்துநிலைமகவான்குபேரனங்கிநிருதிகூற்ற
னறைபுனலுக்கிறைகாற்றீசானியன்மற்றிவர்திசைவிண்ணவனியாக
முறையிருக்கும்யோகினிதன்முன்மரணம்பலபிணிபின்முதிர்சீர்வெற்றி
தறைவிணிற்பின்மத்திமமித்தன்மைசண்டுவெழிநடக்கத்தக்கதாமே.

வேள்குறிச்சி ஜமீந்தார் "தானுமகவானுஞ்சரி" என்றடி யெடுத்துக் கொடுத்தபோது கூறியகவி.

மாகந்தனைப்போற்றிவண்மையுற்றுவாவிபம்பெற்
றாகுந்தருக்குலவுமற்புதத்தாற்—பாகுஞ்செந்
தேனுமெனவோதுதமிழ்தேர்ந்தருள்வேலப்பதுரை
தானுமகவானுஞ்சரி.

"வீணைநாதங் கேட்பார்மேல்" என்றடி யெடுத்துக் கொடுத்த போது கூறியகவி.

தும்புருவுநாரதனுந்துன்னுபலகின்னரரு
மிம்பர்வரநாணியிருந்தின்னம்—பைம்பொனெடுந்
தூணைநேரும்புயவுத்துங்கவேலப்பதுரை
வீணைநாதங்கேட்பார்மேல்.

சேதுபதியவர்கள் பழங்கொடுத்தபோது கூறியது.

அஞ்சேலெனப்பலந்தந்தானினியார்னேர்மக்கு
நெஞ்சேகலிப்புலியைநீவெருட்டு—விஞ்சுபெருஞ்
சீர்படைத்தகோனலர்ந்ததேன்மலர்ப்பொன்மாதிணங்கு
மார்பன்முத்துராமலிங்கமால்.

மேற்கூறிய மாம்பழக்கவிச் சிங்கநாவலர் நிரியாணமாகும்
போது கூறியது.

என்னபிழைநான்செய்திருந்தாலுமெண்ணும
லன்னபிழையெல்லாமகற்றியின்னே—நின்னுபய
பாதநிழனல்கியருள்பாலித்துக்கொள்சமைய
நீதகுகவுன்னைநம்பினேன்.

சேற்றூர்-இராமசாமிக்கவிராயர்,
சேற்றூர்ச் சம்ஸ்தான வித்வான்.

உ

திருவாசகத்தில்

"ஐயாறதனிற் சைவனாகியும்"

என்றதன் வரலாறு.

சோழ நாட்டிற் சிவக்ஷேத்திரங்களு ளொன்றாகிய பஞ்சநதம் என்னுந் திருவையாற்றிலே திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் பஞ்சநதேசுரரை அருச்சனை செய்துவரும் ஆதிசைவப்பிராமணர்கள் இருபத்து நால்வராவார்.

அவருள்ளே யொருவர் கங்காஸ்நானஞ் செய்யும்பொருட்டுக் காசியாத்திரை சென்று நீண்டநாளாகத் திரும்பிவராதிருந்தனர். அதுகண்டு அவருடைய காணிமுதலிய வருவாய்களை யனைய இருபத்துமூன்று அருச்சகரும் பங்கிட்டுச் சாதனமெழுதி அனுபவிக்கத்

தொடங்கினர். காசியாத்திரை சென்றவரது மனைவி தன்மைந்தனுடனே அதைத்தெரிந்து அவ்விருபத்துமூவர் சபைக்கட்சென்று என்னுடைய காணியை நீங்களபகரிப்பது தகுதியல்லவென்று தடுத்தனள். அவர்கள் அவளைநோக்கிப் பிள்ளையில்லாதவன் காணியை ஞாதியர்கள் எடுத்துக்கொள்ளுவது நியாயமென்று கூறி மறுத்தலும், அவள் 'யாத்திரைசென்றவர்மனைவியாகிய யானுமிருக்கின்றேன் பிள்ளையுமிருக்கிறது, அவருமினிமேல் வந்துவிடுவர், நீங்களிந்தக் கேடுசெய்யவேண்டா' வென்று மிகவும் வற்புறுத்தி மறுத்தனள்.

இருபத்துமூவரும் அதை அங்கீகரியாமல் பெண்காணி யாளுவாயோவென்று அவளைப் பிடரியைப்பிடித்துத் தள்ளச்சொல்லினர். உடனே காணியிழந்த அம்மாதர்சிகாமணி அவர்களைப்பார்த்துப் பூமியையாளுகின்றவர் வலிமைசெய்தால் நிலைத்துநிற்கமாட்டார்கள். விண்ணுலகத்தை யாளுகின்றவருமிங்ஙனம் அநீதி செய்யார்கள். பஞ்சநதேசுரர் பிரத்தியக்கமாகிய சாட்சியாகவிருக்கின்றார். நீங்களுந் தெரிவீரென்று சொல்லிவிட்டு மனங்கலங்கி வாடிவந்து பஞ்சநதேசுரர் கோயிலின் முன்னேநின்று 'ஆதாரமில்லாதவருக்காதாரமானவரே, மார்க்கண்டனுக்காக யமனையுதைத்தருளிய பெருமானே, திருவையாறுடையவரே, முற்றத்துறந்தவருக்குத் துணையாயுள்ளவரே, பயந்தவருக்குப் புகலிடமானவரே வேறொரு துணைகாணேன். உம்முடைய திருவடித்தாமரைகளுக்கடைக்கலம்' என்றுபலவாறாகத் துதித்து, வஞ்சகராகியஞாதிகள் செய்யுங் கணக்கழிவு கண்டீரோ, இது முறையோவென்று தேம்பிநின்றழுதனள். அவளுடைய குழந்தையுமவ்வாறே அழக்கண்ட கருணாநிதியாகிய பஞ்சநதேசுரர் திருவுளமிரங்கி அழிவழக்குச் செய்யுஞ்சிவப்பிராமண ரபகரித்த காணி முதலியவற்றை உடையவருக்குச் சேரச்செய்யும்பொருட்டுத் திருவையாற்றுக்குப் பக்கத்திலுள்ள விளாங்குடி யென்னுங்கிராமத்தில் காசியாத்திரைசென்ற சிவப்பிராமணரைப்போல் விபூதி யுருத்திராக்கமுதலிய சிவசின்னங்களைத் தரித்துக் காசிக்கங்கை கட்டிய காவடியையுந் தோளிலேசுமந்து திருவையாற்றுக் கெழுந்தருளிவந்து காணியை வஞ்சித்துக் கொண்டவருக்கெதிரேநின்று பஞ்சநதேசுரரும் அறம்வளர்த்தநாயகியும் விநாயகர் குமரக்கடவுளு நீங்களுஞ்சுகமாக

விருக்கின்றீர்களாவென்று வினவி அவர்களைத் தழுவிக்கொண்டனர். அப்பொழுதவர்கள் நாணமடைந்து நின்றனர். அதன்மேலென்னுடைய காணியை இல்லையென்றவர் யாரென்று காசிவாசியாகிய பிராமணர்கேட்க, நாங்கள் செய்தபிழையைப் பொறுத்தருளுமென்று இருபத்துமூன்று பிராமணரும் பிரார்த்தித்தனர்.

அந்தச் சமயத்திலே மனைவியும் புத்திரனும் வந்து பிரிவாற்றாமைக்குங் காணியிழந்தமைக்கும் மனநொந்தழுது நின்றனர். அவ்விருவரையுந்தேற்றி இருப்பிடத்துக்குப் போகச்சொல்லி மீண்டு காசிவாசியாகிய மறையோர் சூரியபுட்கரணி தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து விபூதிதரித்து நித்தியகன்மமுடித்துக் கோயிலினுட்சென்று பஞ்சநதேசுரரைப் பூசிக்கவேண்டுந் திருப்பள்ளித் தாமமுதலியவை கொணர்வித்துக் கங்கைநீரை யெடுத்துத் திருமுடிமேலபிடேகஞ்செய்து திருவொற்றாடை சந்தனங் குங்குமம் புட்பமுதலியவை சாத்தி யலங்காரஞ்செய்து சோடசோபசாரத்தா லருச்சித்துப் பின்னர் அறுசுவையவாகிய நால்வகை யுண்டிகளை யமைப்பித்து மயேசுரபூசைசெய்து அதன்மேல் பஞ்சநதேசுரனை நிவேதிப்பித்துப் பூசனைமுடித்து வெளியேவந்து சிவாசாரியருடைய பொதுமடத்தில் வீற்றிருந்தருளினர்.

அப்போது காசியாத்திரை சென்றிருந்த அருச்சகராகிய சைவரும் கங்கைநீர்தாங்கிய காவடியெடுத்துக்கொண்டு சைவாசாரியர்களிருக்குஞ் சபைமுன்னே வந்து நின்றனர். அச்சபையின்கணுள்ளாரெல்லாரும் இஃதென்ன அற்புதமென்று வியந்து மயங்கினர். மனைவியு மைந்தருங்கண்டு திகைத்துநின்றனர். முன்வந்த சிவாசாரியர் நீர் யாவரென்று பின்வந்தவரை வினவலும் அவர் எம்பிரான் பூசைசெய்யு மிருபத்துநால்வரிலொருவன், முதற்பூசை செய்தற்குமுரியனென்றனர். அது கேட்ட திரிநேத்திரதாரியாகிய ஆசாரியர் கோபங்கொண்டு பற்பல விதத்தாலவரைத் துன்புறுத்தினர். அவர் அழுதுகொண்டுபோய்த் தமக்குரிமையாகிய சாதனங்களையெடுத்துத் தந்து காட்டினர். அதுபோலவே பெருமானும் வேண்டிய சாதனங்களெல்லாந் தம்மிடத்தி லிருந்தெடுத்துக் காட்டினர். இவ்விருவர் சாதனங்களையுஞ் சபையின்கணுள்ளாரும், ஏனையோரும் பார்த்ததி

சயித்து முழுவதும் ஒத்திருந்தபோதிலும் சிறிது வேறுபாட்டால் மெய்ச்சாதனத்தையே பொய்ச்சாதனமெனக்கூறினர். பெருபானுகிய ஆசாரியர், சைவர்காள் வெற்றியாருடையதென்று வினவலும் அவர்கள்ளுடையதே யென்றனர்.

உடனே பஞ்சநதேசுரராகிய சைவாசிரியர் திருவுருவை மறைத்து ஆகாயத்தினின்று சைவர்களே, நம்மையர்ச்சிக்குஞ் சைவனுகிய இவனுக்குக் காணிமுதலிய வெல்லாவுரிமையுமிரண்டுபங்குகொடுத்து நீங்களும் நீடூழிவாழ்வீரென் றருளிச்செய்தனர். அத்திருவாக்கைச் சபையாரும் பிறருங்கேட்டுத் திருவருளை வியந்து பணிந்து பரவசராயினர்.

இச்சரிதந் திருவையாற்றுப் புராணத்திலே சைவசருக்கத்திற் கண்டது. இது நிகழ்ந்தகாலந்தொட்டுஇன்றுகாறும் திருவையாற்று மகோற்சவத்தில் பஞ்சநதேசுரர் தம்மைத்தாமருச்சித்த அற்புதம் ஐந்தாந் திருவிழாவில் நடத்தப்பட்டுவருகிறது.

இங்ஙனம்,

மு. ரா. அருணசலக்கவிராயர்,

சேற்றூர்ச்சம்ஸ்தான வித்துவான்.

புத்தகக் குறிப்பு.

தக்ஷண இந்திய சரித்திர சாரசங்கிரகம்:--இது, நமது தென்னாட்டு உத்தம தேசாபிமானிகளுள் ஒருவராகிய ஸ்ரீ ப.க்-சே. ப. நரசிம்மலு நாயுடு அவர்களால், சென்னைச் "சுதேசமித்திரன்" பத்திரிகையில் எழுதப்பட்டுப் பின் புத்தக ரூபமாக்கப்பட்டது. தென்னுடாண்ட அரசர் சரித்திரங்களை, நாயடு அவர்கள் பல நூல்களைக்கொண்டு எழுதியிருக்கின்றார்கள். பழைய வரலாறுகள் தெரிய விரும்புந் தமிழ் மக்களுக்கு இது பெரிதும் பயன்படத்தக்கதேயாம். இந்நூல், மூன்று காண்டங்களுடையதாய்ப் பகுக்கப்பட்டு, முதற்காண்டத்தில்

பெருநிலப்பரப்பையாண்ட ஆந்திரர்முதலிய பிரபலவரசர் சரித்திரங்களையும், இரண்டாவதில்தேவகிரியாதவர், கடம்பர், ஹொய்சலர், சேலாத்தியர், மைசூரர், சேரசோழபாண்டியர் சரித்திரங்களையும், மூன்ருவதில் நாயகவரசர் சரித்திரங்களையும் தொகுத்துக் கூறுவதாகும். இந்நூற் பதிப்பில், சொற்பிழைகளும் கருத்து மாறுபாடுகளும் அங்கங்கே காணப்படுகின்றனவாயினும், நாயடு அவர்கள் அவற்றையறிந்து அடுத்த பதிப்பில் நீக்கிக் கொள்ளாதிரார்கள். முதற்பதிப்பில் நேர்ந்த வழூஉக்களைப் பற்றி அவர்களே முகவுரையில் வருந்துகிருர்கள். நாயடு அவர்கட்குத் தமிழ்ப்பாஷா ஞானம் அதிக மில்லாமற்போயினும், தாங்கற்ற கலைகளைத் தமிழர்க்கு எவ்வாற்ருனும் பயப்படுத்த வேண்டுமென்னும் பேருபகார சிந்தையை யாம் பெரிதும் வியந்து புகழ்வோம். தாங்கற்றுள்ள பலதுறைகளிலும் தமிழர்க்கு ஓராற்ருற் பயன்விளைக்குமாறு அவர்கள் பல நூல்களெழுதி வெளியிட்டிருக்கிருர்கள். தேசாபிமானப் பற்ருல் ஜனோபகாரத்தைக் கவலையுடன் போற்றும் நாயடு அவர்கள், தம் ஒழிவுக்காலங்களை இத்தகைய நூல்களெழுதுவதிற் செலவிட்டு, இவ்வாறு பலவழியாலும் நம்மவரை அதிகநன்றியறிதற்குப் பாத்திரராக்கியுள்ளார்கள். கற்றவற்றைப் பிறர்க்குப் பயன்படுத்தாத் தமிழ்வல்லாரினும், அவற்றை எங்ஙனமாயினும் உபயோகப்படுத்தும் நாயடு அவர்களைப்போன்ற உபகாரிகளையே உலகம் நாளும் அவாவுவதாகும். அவர்கள் எழுதும் பாஷை நடையைச் சீர்திருத்தியழகாக்குவது பின் அரிதன்று. நாயடு அவர்கள் இனித் தாம் உபகரிக்க நினைந்துள்ள ஏனையவற்றில், பிறர் சொல்லும் இக்குறையுமில்லாது போற்றுவார்களென்பது எமது நம்பிக்கை. இந்நூலை, அவர்கள், சங்கத்து அக்கிராசனுதிபதியவர்களும், பாலவனத்தம் ஜமீந்தாரவர்களுமாகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்கட்கு ஸமர்ப்பித்துள்ளார்கள். இந்நூற் பிரதியொன்று எமது பார்வைக்கு விடுத்த அவர்கட்கு எம்முழுவந்தனமும் தருகின்றேம்.

பத்திராசிரியர்.